பாரதி கலை மன்றம், ஹூஸ்டன், டெக்சாஸ்

Bharathi Kalai Manram, Houston, Texas

தமிழ்ச்சாரல்

வண்ணமலர்

ஆகஸ்ட் -2025

BKM 2025 Board

President

Anitha Kumaran

Vice President

Yamini Vijayakumar

Secretary

Kausalyadevi Nambi

Treasurer

Raja Anantharaman

Communications Director

Savitha Vidyaprakash

Literary Director

Swarna Latha Magesh

Joint Secretary

Nandhu Randhakrishnan

Joint Treasurer

Ramalingam Mahadevan

Joint Communi cations Director

Ilankuzhali Mani

Joint Literary Director

Ravisankar Periyasamy

Executive Director I

Kannan Gandhi

Executive Director II

Jeevan Prasad Sekhar

Past President

Viji Thiru

Tamil School Director

Sivasubramaniam TG

தமிழ்த்தாய் வாழ்த்து

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடர்நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!!
வாழ்த்துதுமே!!!"

- மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை

Bharathi Kalai Manram

No1. Tamil Non- Profit organization in Houston

"Bringing People, Arts & Culture together"

ஆசிரியர் பக்கம்

ஹூஸ்டன் வாழ் தமிழ் சொந்தங்கள் அனை வருக்கும் எங்கள் வணக்கம்! உங்களை பல நல்ல தருணங்களில் சந்தித்திருந்தாலும் தமிழ்ச் சாரல் வண்ண மலர் வாயிலாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி!

“வள் இதழ்
ஒண் செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண் கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங் கொடுவேரி, தேமா, மணிச்சிகை,
உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ், கூவிளம்,

எரி புரை எறுழம், சுள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான் பூங் குடசம்,
எருவை, செருவிளை, மணிப் பூங் கருவிளை,
பயினி, வானி, பல் இணர்க் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல் இணர்க் காயா,

விரி மலர் ஆவிரை, வேரல், சூரல்,
குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி,
குருகிலை, மருதம், விரி பூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங் கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந் தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடி கமழ் கலி மா,
தில்லை, பாலை, கல் இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமாரோடம்,
வாழை, வள்ளி, நீள் நறு நெய்தல்,
தாழை, தளவம், முள் தாள் தாமரை,

ஞாழல், மௌவல், நறுந் தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறுசெங்குரலி,
கோடல், கைதை, கொங்கு முதிர் நறு வழை,
காஞ்சி, மணிக் குலைக் கள் கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல் பூந் தணக்கம்,

ஈங்கை, இலவம், தூங்கு இணர்க் கொன்றை,
அடும்பு, அமர் ஆத்தி, நெடுங் கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல் பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்துவாரம்,
தும்பை, துழாஅய், சுடர்ப் பூந் தோன்றி,

நந்தி, நறவம், நறும் புன்னாகம்,
பாரம், பீரம், பைங் குருக்கத்தி,
ஆரம், காழ்வை, கடி இரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மா இருங் குருந்தும், வேங்கையும், பிறவும்,

அரக்கு விரித்தன்ன பரு ஏர்அம் புழகுடன்,”

என்று கபிலர் தன்னுடைய குறிஞ்சிப்பாட்டில் 99 வகை மலர்களையும் ஒருசேர குறிப்பிட்டுள்ளார். அதனை அடியொற்றி கதை,கட்டுரை கவிதை, சமையல் குறிப்பு,தமிழ் பள்ளி குழந்தைகளின் எழுத்து மற்றும் ஓவியங்கள் என பல வண்ணங்கள் கொண்ட நறுமலர்களை தொடுத்து,’தமிழ்ச்சாரல் வண்ண மலர்’ என்னும் பூங்கொத்தாக,மலர் மாலையாக,உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

தமிழ்ச் சாரல் வண்ண மலருக்கு ஆர்வத்துடன் படைப்புகளை அனுப்பிய அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.இந்த இதழ் சிறப்பாக வெளியிட உதவி நல்கிய விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது நன்றிகள்.

தமிழ்ச்சாரலை மேல் மேலும் வளப்படுத்த உங்களது நிறை (நிறைய) , குறை (குறைவாக) களை literarydirector@bkmhouston.org மற்றும் jointliterarydirector@bkmhouston.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

நன்றி !!



என்றும் அன்புடன்,

சுவர்ணலதா மகேஷ் (BKM இலக்கிய இயக்குனர்)
ரவிசங்கர் பெரியசாமி (BKM இணை இலக்கிய இயக்குனர்)
ஆசிரியர் குழு, தமிழ்ச் சாரல் –2025

பொறுப்புத் துறப்பு: வாசகர்களின் வசதிக்காக சில இடங்களில் ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தலைவர் உரை

அன்பு தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கும், நல்லுள்ளங்களுக்கும்,

எமது சங்கத்தின் நோக்கம் எப்போதும் நம் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும், சிறப்புமிக்க தமிழ் மொழியையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதே. உலகின் பழமையான, இனிமையான மொழியான தமிழின் பெருமையை உணர்த்தி, அதை பேசவும், எழுதவும், வாழ்வில் பயன்படுத்தவும் ஊக்குவிப்பதே எமது மையக் குறிக்கோள்.

இந்த ஆண்டு, எங்கள் முக்கிய கவனம் தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சியிலும், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும் உள்ளது. எங்கள் பள்ளிகள் எங்கள் மொழியின் உயிர் சக்தியாகவும், எங்கள் எதிர்காலத்தின் விதைகளாகவும் உள்ளன.

இந்த ஆண்டின் சில முக்கிய சாதனைகள்:

- தமிழ் பள்ளி மாணவர்களுக்கான உதவித்தொகை திட்டம்.
- ஆசிரியர்களுக்கு, கட்டணமுள்ள நிகழ்ச்சிகளில் சலுகை விலையில் பங்கேற்கும் வாய்ப்பு.
- தமிழ் பள்ளிகளின் மைல்கல் கொண்டாட்டங்களை ஹூஸ்டன், கேட்டி, பேர்லேண்ட் மற்றும் சுகர்லேண்ட் பகுதிகளில் கொண்டாடியது.
- நன்கொடையாளர்களிடமிருந்து நிதி திரட்டுவதன் மூலம் சங்கத்துக்கு ஆதரவு கிடைத்தது.
- Credit by Exam குழுவின் துவக்கம் — இதன் மூலம் தமிழ் மொழிக்கு கல்வி அங்கீகாரம் பெறும் பாதை திறக்கப்பட்டது.
- புதிய தமிழ் பள்ளி கிளை பிரிட்ஜ்லேண்ட் பகுதியில் துவக்கம்.
- இவ்வாண்டு பெரும்பாலான நிகழ்ச்சிகள் இலவசமாக நடத்தப்பட்டன.
- ஆசிரியர் பாராட்டு விழா — இவ்வாண்டு BKM நாள் விழாவில், ஆசிரியர்களை அனைவரின் முன்னும் பாராட்டுவதன் மூலம், அவர்களின் கல்விச் சேவை அனைவராலும் அறியப்பட்டது.

இந்த பயணத்தில் உழைத்த எமது குழு உறுப்பினர்களுக்கும், தமிழ் பள்ளி இயக்குநர்களுக்கும், அயராது அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியர்களுக்கும், ஆதரவான பெற்றோர்களுக்கும், உற்சாகமாக பங்கேற்ற மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால், நமது தமிழ், நமது பண்பாடு, நமது மரபு என்றுமே வளர்ச்சி பெறும். நம் ஒற்றுமையும் முயற்சியும் தொடர்ந்து இருந்தால், நம் குழந்தைகளின் வாயில் தமிழ் இனிமையாக எப்போதும் ஒலிக்கும்.

-அன்புடன்,

அனிதா குமரன்,

தமிழ்ச் சங்கத் தலைவர் 2025, பாரதி கலை மன்றம், ஹூஸ்டன்

நன்றி & வாழ்த்துச் செய்தி

அன்புள்ள பாரதி கலை மன்ற உறுப்பினர்களே,

இந்த ஆண்டில் எங்கள் மன்ற நிகழ்வுகள் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கின்றன. உங்களின் அன்பும், ஆதரவும், அர்ப்பணிப்பும் தான் அதற்கு காரணம். இதற்காக உங்களின் ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே உற்சாகமும் ஆதரவும் அடுத்த ஆண்டிலும் தொடர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அடுத்த ஆண்டு நான் தலைவர் பொறுப்பை ஏற்க இருக்கிறேன்; அந்தப் புதிய பயணத்தில் உங்கள் அனைவரின் உறுதுணை எனக்கு பெரும் பலமாக இருக்கும்.

நாம் ஒன்றாகச் சேர்ந்து நமது தமிழ் மொழியும் பண்பாடும் இன்னும் உயர வளரச் செய்வோம்.

அன்புடன் நன்றியுடன்,
வாழ்த்துகளுடன்,

யாமினி விஜயகுமார்

துணைத் தலைவர் 2025
பாரதி கலை மன்றம் ஹூஸ்டன்

பொருளடக்கம்

அன்பு எனும் ஔடதம்	09
BKM 2025 கோலாகல பொங்கல் திருவிழா கொண்டாட்டம் !	10
BKM மன்ற நிகழ்வுகள் 2025	12
BKM Club coordinators 2025	23
தமிழ் எண்கள் - பாரம்பரியம் & செல்வவளம்	24
முத்தே மணியே மனிச்சுடரே..	25
BKM தமிழ்ப் பள்ளிகள் 2025	26
BKM கல்வி உதவித்தொகை (Scholarship) 2025	30
மண்ணின் மைந்தர்கள்	32
கடல் பயணங்களும் மற்றும் மொழி பரிணாமமும்	34
கோடை விடுமுறை: 1980 VS 2025	38
நம் பாரதி	42
என் வீட்டு தோட்டத்தில்	44
சர்வதேச சமையல்	47
பாரம்பரிய சமையல்	48
அண்ணலும் நோக்கினான்;அவளும் நோக்கினாள்	49
நம்பிக்கையின் சவாரி	50
அந்நியன் (சிறுகதை)	51
ஹைக்கூ கவிதைகள்	55
சிறுவர் பக்கம்	56
சித்திரம் பேசுதடி	56
திரை நேரத்திற்கு மாற்றாகச் செய்யக்கூடிய செயல்கள்	58

Special Mention

Tamil Charal Front cover design – AI art by Swarna Latha Magesh
Tamil Charal Back cover design – Ravisankar Periasamy
Tamil Charal Book Graphics – Sudalai , Esakki Graphics
Tamil Charal Book Printing - Astro Printing, Houston

அன்பு எனும் ஔடதம்

அன்பு எனும் பிடியில் அகப்படும் தனிப்பொருள்.
ஆத்ம பரமாத்ம தத்துவத்தை விளக்கிடும் கருப்பொருள்.
இகபர சுகத்தோடு இறை உணர்வை உணர்த்திடும் உரிப்பொருள்.
ஈகை குணத்தை மனத்தில் வளர்த்திடும் பருப்பொருள்.
உள்ளுவார் உள்ளத்தே உறைந்திடும் பரம்பொருள்.
ஊர்க்கூடி இழுப்பது இரதம் (தேர்) - நம்
எண்ணத்தில் உதிப்பதோ மனோரதம்.
ஏழேழ் பிறவியிலும் உடன் தொடரும் கருமம்.
ஐயமிட்டு உண்பதால் உண்டாகும் தருமம்.
ஒருத்தன் ஒருத்தி என வாழ்வது கற்பு.
ஓர் ஆபத்தில் உயிரைக் கொடுத்து காப்பது நட்பு.
ஔதார்யமுடைய மனமே அன்பு எனும் ஔடதம்.

முனைவர் வ.கோ.சொக்கலிங்கம்,
பிரதான ஆசிரியர், ஸப்தகிரி மாத இதழ், தி.தி.தே. திருப்பதி.

BKM 2025 கோலாகல பொங்கல் திருவிழா கொண்டாட்டம்!

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற நம்பிக்கைக்கு ஏற்ப கொண்டாடப்படும் திருவிழா பொங்கல் திருவிழா. தன் பெண்டு, தன்பிள்ளை, தன்வீடு, தன் சம்பாத்தியம் என சுயநலமாய் இல்லாமல் தன் சக மனிதர்களை சந்தித்துப்பேசி வாழ்த்துக்கூறும்.

“மனித நேயத் திருவிழாவாக” ஹூஸ்டன் பாரதி கலை மன்றம் பொங்கல் விழாவைக் கொண்டாடியது. இயற்கை, உழைப்பு, நன்றியுணர்வு ஆகியவற்றைப் போற்றும் பெருவிழாவாக பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது.

“தையொரு திங்களும், தரை விளக்கித்
தண்ணீர் தெளித்து, கோலமிட்டு,
தெருவணிந்து, அழகினுக்கு அலங்கரித்து”
என ஆண்டாள் நாச்சியார் பாடியது
போல கோல விளக்கும், கொடியும்,
விதானமும், மாவிலையும், தோரணமும் மங்கல விளக்குகளும்,

மாக்கோலமிட்ட குடிசையும், புத்தரிசியும், புதுப்பானையுமாய் அரங்க வாயிலை Dcor One அலங்கரித்திருந்தனர். வருகை தந்தோர் சுற்றத்துடனும், நட்புடனும், உற்றார், உறவினருடன் அருகில் அமைந்திருந்த Photo Booth -ல் புகைப்படங்கள் எடுத்து அகமகிழ்ந்தனர். அரங்கத்தில் பத்திற்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்கள் அமைந்திருந்தன. நுழைவு வாயிலிலேயே, ஆனைமுகன், ஐங்கரன், தங்க விநாயகர் அருளாசி வழங்க, இருபுறமும் கொம்பினில் பூச்சூடி, கழுத்தினில் மணியசைய மாடுகள் வரவேற்பு கூறின.

அருள்மிகு மீனாட்சி கோவில் மண்டபத்தில் குறிப்பிட்ட நல்ல நேரத்தில் 2025 ஆம் ஆண்டு செயற்குழு உறுப்பினர்கள் குத்து விளக்கேற்ற, தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதே தொடங்கியது. 850க்கும் மேற்பட்ட

பார்வையாளர்களால் அரங்கம் நிறைந்திருந்தது. ஆதரவளித்த MTS நிர்வாகிகளுக்கு அகம் கனிந்த நன்றி. கலை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் தனித்துவத்துடன் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணம் அமைந்திருந்தது.

பியர்லாண்டின் மேதகு மேயர் திரு.கெவின் கோல் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்து மன்றத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசி பெருமைப்படுத்தினார்.பாரதி கலை மன்றத்தின்

COMMUNITY

Pongal: A celebration of gratitude and humanity

—By Swarna Latha Magesh

Pearland Mayor Kevin Cole was the chief guest.

முன்னாள் தலைவர் அவர்களையும்,தமிழ் பள்ளிகளின் முன்னாள் ஒருங்கிணைப்பாளர்கள், குறிப்பாக திருமதி.மாலா கோபால், திருமதி.மலர் நாராயணன் ஆகியோரையும் விழாவில் கௌரவித்தனர்.2025 ஆம் ஆண்டின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் மேடையில் அறிமுகப்படுத்தியது வெகு சிறப்பு.

பாரதி கலை மன்ற அரும்புகளின் அழகு நடனத்தோடு கலை நிகழ்ச்சிகள் தொடங்கின. அம்மாவைப் பார்த்தபடியே, அபிநயத்து ஆடியது கண்கொள்ளாக்காட்சி ! ஆடைகட்டி வந்த நிலவோஅன்றி

மேடையிட்டு ஆடும்எழிலோ?" என வண்ணப் பட்டாடையுடன் ஆடிய பாவையரின் பரதநாட்டியம் வெகு நேர்த்தி! பாரதியாரின் " தீராத விளையாட்டுப் பிள்ளை" கண்ணனை, நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்திய கோபியர் நடனம் மிக அருமை! சூப்பர் ஸ்டார் ரஜினிக்கான நடனத்தில் ஹெலி காப்டரை நேரில் மேடையில் காட்சிப்படுத்திய விதமும், நேரடியாகப் பறை இசைத்து ஆடிய பறையாட்டமும்,சிலம்பாட்டமும், பொங்கல் நடனமும்,குழு நடனமும்,கோலாட்டமும் திரையிசைப் பாடலுக்கான நடனங்களும் பலத்த கைதட்டலைப் பெற்றன.

பொங்கல் திருவிழா மேடையில் பாரதி கலை மன்ற தலைவர் திருமதி. அனிதா குமரன் அவர்கள் 2025ஆம் ஆண்டு உயர் கல்வி மாணவர்களுக்கான உதவித்தொகை பற்றி அறிவித்தார்.புதிய தமிழ் பள்ளிக்கான கோரிக்கையும் இந்த பொன்னான தருணத்தில் முன்வைக்கப்பட்டது. தன்னார்வ தமிழாசிரியர்களுக்கு, பாரதி கலைமன்றம் நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கட்டணத்தில் சலுகை என அறிவிக்கப்பட்டது. இவற்றை பார்வையாளர்கள் ஆரவாரத்தோடு கைதட்டி வரவேற்றனர்.

பாரம்பரியமிக்க குமார் உணவகத்தார் வழங்கிய சிற்றுண்டியும், சிற்றுண்டியும், இரவு விருந்தும் பிரமாதம்!குறிப்பாக தித்திக்கும் பொங்கல் சுவையோ சுவை.எவ்வித வரிசையும், காத்திருப்புமின்றி அனைவருக்கும் வெகு துரிதமாக அறுசுவை உணவுகளை விநியோகித்தது கூடுதல் சிறப்பு !பங்கேற்ற சிறுவர் சிறுமியருக்கு Goodie Bag வழங்கியது அருமை!

தடம் மாறாமல், தடுமாறாமல், திட்டமிட்டபடி குறையேதுமின்றி குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி, நிகழ்ச்சிகளை கோலாகலமாக குறிப்பிட்ட நேரத்திலேயே நிறைவு செய்த பாரதி கலை மன்றத்தினரை அனைவரும் மனதார பாராட்டி மகிழ்ந்தனர் "

சுவர்ணலதா மகேஷ்,
இலக்கிய இயக்குனர், பாரதி கலை மன்றம்

BKM மன்ற நிகழ்வுகள் 2025

asics
DKNY

பாரதி கலை

THALAIVAA 50

Dr.Appan & Rajam Appan
Tennis
Tournament
Supported by
Bharathi Kalai Manram
proudly presents
29th March
Saturday , 4:30 PM
Location : Club At New Territory
1200 Walker School Rd, Sugarland, TX
Professionally organized under the leadership of Dr .Saran
Winners will be awarded trophies
Please contact to register:
Registration fee : $20
Dinner included
For Registration Contact :
Nandhu Radhakrishnan
BKM
@ +1 (573) 823-8252
Govindan Somaskanthan
@ 713 715 9838
Registration ends : March 25 2025

BHARATHI KALAI MANRAM, HOUSTON, TEXAS
(தமிழ்ச் சபை)
&
SILAMBU, MICHIGAN
(செந்தமிழ்அவை)
பெருமையுடன் வழங்கும்
தமிழ் புத்தாண்டு
சிறப்பு பட்டிமன்றம்
இன்றைய தேவை
செல்லா ? சொல்லா?
WEDNESDAY
APRIL 16
07:00PM - 08:30PM
CST
HOSTED BY
ZOOM
செல் அணி
சொல் அணி
நடுவர்
DR.SWAMINATHAN
SUBRAMANIAN
MICHIGAN

ARATHI KALAI MANRAM
Proudly Presents
THALAIVAA 50
SAVE THE DATE

BKM Club coordinators 2025

BKM Tamil Sabai coordinator

SwarnaLatha Magesh

Ravisankar periyasamy

BKM Golden Group coordinators



Kannan Gandhi

Jeevan Prasad Sekar

BKM Youth Club coordinators

Sivasubramaniam Gopalakrishnan

RamaLingam Mahadevan

தமிழ் எண்கள் –பாரம்பரியம் & செல்வவளம்

தமிழ் எண்கள் ஒரு வளமான வரலாற்றைக் கொண்டுள்ளன, ஆரம்பகால கல்வெட்டுகளிலிருந்து இந்து-அரபு எண் முறையை ஏற்றுக்கொள்வது வரை உருவாகி வருகின்றன. பண்டைய தமிழ் நூல்கள் எண்களுக்கான குறியீடுகளின் அமைப்பைப் பயன்படுத்தின, பெரும்பாலும் சொற்களுடன், நவீன தமிழ் மொழி முதன்மையாக இன்று நாம் அறிந்த இந்து-அரபு எண்களைப் பயன்படுத்துகிறது.

൦ = 0	ரு = 5
க = 1	சா = 6
உ = 2	எ = 7
ங = 3	அ = 8
ச = 4	கூ = 9

ய = 10
ள = 100
தூ = 1000

வித்யா பிரகாஷ் ராமசாமி

Value	Name	Transliteration
$\frac{3}{80} = 0.0375$	முக்காணி	mukkāṇi
$\frac{1}{32} = 0.03125$	அரைவீசம்	araivīsam
$\frac{1}{64} = 0.015625$	கால் வீசம்	kāl vīsam
$\frac{3}{320} = 0.009375$	முக்கால்காணி	mukkālkāṇi
$\frac{1}{320} = 0.003125$	முந்திரி	muntiri
$\frac{3}{1280} = 0.00234375$	கீழ் முக்கால்	kīḻ mukkāl
$\frac{1}{640} = 0.0015625$	கீழரை	kīḻarai
$\frac{1}{1280} = 7.8125\times10^{-4}$	கீழ் கால்	kīḻ kāl
$\frac{1}{1600} = 0.000625$	கீழ் நாலுமா	kīḻ nālumā
$\frac{3}{5120} \approx 5.85938\times10^{-4}$	கீழ் மூன்று வீசம்	kīḻ mūnṟu vīsam
$\frac{3}{6400} = 4.6875\times10^{-4}$	கீழ் மும்மா	kīḻ mummā
$\frac{1}{2500} = 0.0004$	கீழ் அரைக்கால்	kīḻ araikkāl
$\frac{1}{3200} = 3.12500\times10^{-4}$	கீழ் இருமா	kīḻ irumā
$\frac{1}{5120} \approx 1.95313\times10^{-4}$	கீழ் வீசம்	kīḻ vīsam
$\frac{1}{6400} = 1.56250\times10^{-4}$	கீழொருமா	kīḻorumā
$\frac{1}{102400} \approx 9.76563\times10^{-6}$	கீழ்முந்திரி	kīḻmuntiri
$\frac{1}{2150400} \approx 4.65030\times10^{-7}$	இம்மி	immi
$\frac{1}{23654400} \approx 4.22754\times10^{-8}$	மும்மி	mummi
$\frac{1}{165580800} \approx 6.03935\times10^{-9}$	அணு	aṇu[1]
$\frac{1}{1490227200} \approx 6.71039\times10^{-10}$	குணம்	kuṇam
$\frac{1}{7451136000} \approx 1.34208\times10^{-10}$	பந்தம்	pantam
$\frac{1}{44706816000} \approx 2.23680\times10^{-11}$	பாகம்	pāgam
$\frac{1}{312947712000} \approx 3.19542\times10^{-12}$	விந்தம்	vintam
$\frac{1}{5320111104000} \approx 1.87966\times10^{-13}$	நாகவிந்தம்	nāgavintam
$\frac{1}{74481555456000} \approx 1.34261\times10^{-14}$	சிந்தை	sintai
$\frac{1}{1489631109120000} \approx 6.71307\times10^{-16}$	கதிர்முனை	katirmuṇai
$\frac{1}{59585244364800000} \approx 1.67827\times10^{-17}$	குரல்வளைப்படி	kuralvaḷaippaḍi
$\frac{1}{3575114661888000000} \approx 2.79711\times10^{-19}$	வெள்ளம்	veḷḷam
$\frac{1}{357511466188800000000} \approx 2.79711\times10^{-21}$	நுண்மணல்	nuṇmaṇal
$\frac{1}{2323824530227200000000} \approx 4.30325\times10^{-22}$	தேர்த்துகள்	tērttugaḷ

தமிழ் எழுத்துக்களில் பின்னங்களைக் (*fractions*) குறிக்கும் குறியீடுகளும் உள்ளன.

- 1/2 (Half): "**அரை**" (arai)
- 1/4 (Quarter): "**கால்**" (kaal)
- 3/4 (Three-quarters): "**முக்கால்**" (mukkl)
- 1/5 (One-fifth): "**நாலுமா**" (nlum)
- 1/8 (One-eighth): "**அரைக்கால்**" (araikkl)
- 1/10 (One-tenth): "**இருமா**" (irum)
- 1/16 (One-sixteenth): "**மாகாணி**" (mki) or "**வீசம்**" (vsam)
- 1/20 (One-twentieth): "**ஒருமா**" (orum)

தமிழ் மொழி, பல மொழிகளில் காணப்படும் பொதுவான பின்னங்களுக்கு அப்பாற்பட்ட, வளமான மற்றும் சிக்கலான பின்ன அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த அமைப்பு துல்லியமான மற்றும் விரிவான அளவீட்டில் வலுவான முக்கியத்துவத்தை நிரூபிக்கிறது, குறிப்பாக பண்டைய நில நிர்வாகம் மற்றும் பிற களங்களில் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் அமைப்பில் நம்பமுடியாத அளவிற்கு மிகச் சிறிய பின்னங்கள் கூட உள்ளன, அவை இம்மி (*1/320 x 1/7*) மற்றும் அனு (*1/7* இம்மி) போன்ற துணை அணு நிலைகள் வரை நீட்டிக்கப்படுகின்றன.

இந்தக் கண்ணோட்டம், தமிழ் பின்ன அமைப்பு வெறும் ஒரு நேரியல் அமைப்பாக இருப்பதற்குப் பதிலாக, அதிவேக அல்லது மடக்கைக் கருத்துகளின் உள்ளுணர்வு புரிதலைக் குறிக்கலாம், இது அவர்களின் கணித புரிதலில் குறிப்பிடத்தக்க ஆழத்தை எடுத்துக்காட்டுகிறது.

ஒட்டுமொத்தமாக, தமிழ் எண் கணிதம் மற்றும் எண் அமைப்புகளின் வரலாறு மற்றும் பண்புகள், இந்தப் பிராந்தியத்திற்குள் தமிழ் கலாச்சாரத்தின் ஆழத்தையும் கணித சிந்தனையின் பரிணாம வளர்ச்சியையும் பற்றிய ஒரு பார்வையை வழங்குகின்றன. நாம் அனைவரும் இவ்வளவு வளமான பாரம்பரிய மொழியைக் கற்றுக்கொள்வதில் பெருமைப்பட வேண்டும், மேலும் நமது தாய்மொழியாகப் பழமையான மொழியைக் கொண்டிருப்பதில் பெருமைப்பட வேண்டும்.

முத்தே மணியே மனிச்சுடரே...

முத்தே மணியே மணி சுடரே...
மூச்சு முன்னூறு முடிந்தாலும்
மரணம் மறுநிமிடமானாலும்
மடியில் நான் மிதக்க
மயிலிறகாய் மயிர் கோதி
முகத்தில் நீ முத்தமிட்டால்....
மரணமும் மெய்மறக்கும்

முத்தமிழ் தெய்வமே,
ருத்திரனின் மைந்தனே,
கணேசனுடன் பிறந்தவனே,
இனறிவின் விஷாகனாக
நீ தங்கு
திரு முருகா.

கிருஷ்ணராஜ்
நாராயணா

BKM தமிழ்ப் பள்ளிகள் 2025

BKM Cypress பள்ளி ஆசிரியர்கள்

BKM Houston பள்ளி ஆசிரியர்கள்

BKM Pearland பள்ளி ஆசிரியர்கள்

BKM Katy பள்ளி ஆசிரியர்கள்

BKM Sugarland பள்ளி ஆசிரியர்கள்

Bharathi Kalai Manram (BKM) Tamil School

Accredited By Cognia

Now Open For Register (2025 - 2026)

Become a BKM Family Member to REGISTER
https://bkmhouston.squarehubs.com/

Benefits

- In person Classes, Cultural Events, Tamil School Competition, Trophies ...
- International Tamil Academy structured curriculum
- Pre-K to Grade 8 classes conducted (Ages 3 and above)
- High School Credit* for Tamil Language & High School Volunteering Hours
- College Scholarship for High School Graduates

Established 1974

Annual Fees

School Registration Fees : $80 / Child
Book Fees : $30 / Grade

Early Bird Discount

$10 Discount On Registration Fees until July 15 2025

Contact Us

By Operating Location

CYPRESS	: Thilak 240-535-6337	/ Manikandan 503-724-6435
HOUSTON	: Srividya 346-542-7326	/ Krishnaraj 832-544-8342
KATY	: Manimegalai 832-538-9951	/ Kavitha 979-255-0970
PEARLAND	: Vandhana 318-243-9758	/ Manjula 330-715-2589
SUGARLAND	: Mahesh 832-782-4880	/ Geetha 717-317-0962
	Jeevan 972-215-9737	

General Inquiries : TG Siva 856-325-8636
tamilschooldirector@bkmhouston.org

BKM Tamil School coordinators 2025

Pearland Principal	:	Vandhana Ramamoorthy
Pearland Asst.Principal	:	Manjula Muruganandam
Sugarland Principal	:	Mahesh Periyasamy
Sugarland Asst.Principal	:	Geetha Vinayagamurthy
Sugarland Asst.Principal	:	Jeevan Prasad Sekar
Cypress Principal	:	Thilak Chinnadurai
Cypress Asst.Principal	:	Vijayanand Selvaraj
Houston Principal	:	Srividhya Sabarigiri
Houston Asst.Principal	:	Krishnaraj Narayanan
Katy Principal	:	ManimegalaiGopalakrishnan
Katy Asst.Principal	:	Kavitha Saravanan
Katy Asst.Principal	:	Vikram Selvaraju
Cypress Annex Principal	:	Manikandan Jawaharlal
Cypress Annex Asst.Principal	:	Sudhakar Viswanathan
Cypress Annex Asst.Principal	:	Thiagarajan Ramanathan

BKM கல்வி உதவித்தொகை

(Scholarship) 2025

BKM வரலாற்றில் முதன்முறையாக பள்ளி மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பான யோசனை எமது தலைவர் அனிதாவின் முன்னெடுப்பில் உருவாகியது.

இவர் ஒரு குழுவை அமைத்து, மாணவர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது தொடர்பான செயல் முறைகளை வடிவமைத்தார்.

இந்த ஆண்டில், பள்ளிப் படிப்பில் சிறந்து விளங்கி, தமிழ் பள்ளி முடித்த பிறகும் அதில் தொடர்ந்து சேவை செய்த மூன்று மாணவர்களை BKM பெருமையுடன் உதவித்தொகையுடன் கௌரவிக்கிறது.

செல்வன் விஷால் சுந்தரம், செல்வன் ஷ்ரேயஸ் ராஜகோபால் மற்றும் செல்வி மதுமிதா யுவராஜ் ஆகியோருக்கு வாழ்த்துக்கள்!

மண்ணின் மைந்தர்கள்

– கவிதா ஜவகர், பட்டிமன்றப் பேச்சாளர்.

அமெரிக்க மண்ணில் வாழ்ந்தாலும் நீங்கள் அனைவரும் நம் இந்திய மண்ணின் மைந்தர்கள் தானே.. தமிழ் மண்ணின் புதல்வர்கள் தானே.

மண்ணுக்கு என ஒரு ஆச்சரியமான குணமுண்டு. இந்த மண்ணில் எதைப் போட்டாலும் மக்கிப் போகும். ஆனால் விதை போட்டால் விருட்சமாக மாறி கனி தரும். ஆக இந்த மண் தீய விஷயங்களை அழித்து, நல்ல விஷயங்களை வளர்க்கும் தன்மை உடையது.

மண்ணின் மைந்தர்கள் என்றால் எங்க அப்பாவுக்கு மகன், எங்க தாத்தாவுக்கு பேரன் அதேபோன்றுதான் இந்த மண்ணின் மைந்தர்கள். எப்படி நம் முன்னவர்களின் குணம் நமக்குள் இருக்கிறதோ அதே போல இந்த மண்ணின் குணத்தில் கொஞ்சம் நமக்குள்ளும் இருக்கிறது. இந்த மண்ணுக்கும் நமக்கும் ஒரு தொடர்பு இருந்துகொண்டே தான் இருக்கிறது. காரணம் என்ன தெரியுமா? நம்முடைய அம்மா கருவுற்றபோது மசக்கையின் காரணமாக மாங்காய், சாம்பல், மண் ஆகியவற்றை தின்பார் ஆக முதலில் நாம் சாப்பிட்டது அம்மா சாப்பிட்ட மண் தான். அதற்கடுத்து பிரசவத்திற்கு பின் நமது அம்மா பாட்டி வீட்டிலிருந்து நமது வீட்டிற்கு வரும்போது, நம்முடைய பாட்டி கொஞ்சம் மண்ணை எடுத்து துணியில் முடிச்சுப்போட்டு அனுப்பி வைப்பார்கள். அதாவது அந்த மண்ணின் வாசத்தோடு குழந்தை இருக்க வேண்டும் என்பதற்காக.

அடுத்ததாக நாம் குழந்தையாக இருக்கும்போது தவழ ஆரம்பிப்போம். அந்தப் பருவத்தில் காம்ப்ளான், ஹார்லிக்ஸ், பூஸ்ட் சாப்பிடாமல் மண் அள்ளி சாப்பிடுவோம். ஆக நாம் எடுத்துக் கொண்ட முதல் உணவும் மண்தான். அடுத்து தெருவில்

விளையாட ஆரம்பிப்போம். ஓடி விளையாடும் போது காயம் ஏற்படும். உடனே மருத்துவரை தேடுவதை விடுத்து மண்ணைத் தெள்ளி காயத்தின் மேல் போட்டுவிடுவோம்.

காயத்தை ஆற்றும் மிகப்பெரிய கருணை இந்த மண்ணிற்கு உண்டுஎன்பதை அந்த வயதிலேயே கற்றுக் கொண்டோம். வளர்ந்து வரும் போது திடீரென்று நமக்கு காய்ச்சல் வரும்.

அம்மா நினைப்பார், குழந்தைக்கு யாரோ திருஷ்டி போட்டு விட்டார்கள் என்று. உடனே நாலு முக்கு சந்தியில் மண்ணெடுத்து வந்து சுற்றி போடுவார். கொஞ்சம் வளர்ந்ததும் அம்மா நமக்காக வேண்டுதல் வைத்து மண் சோறு சாப்பிடுவார். ஆக இந்த மண் நம் கூடவே பயணித்துக் கொண்டிருக்கிறது. அதேபோன்று சொத்து பிரிக்கின்ற போது உறவுகள் யாராவது நம்மை ஏமாற்றி விட்டால் பணத்தையோ காசையோ எடுத்து தெருவில் வீச மாட்டோம். பூமியில் கிடக்கும் மண்ணை அள்ளி, ஏமாற்றியதற்கான தண்டனையை நீயே அனுபவித்துக் கொள் என்று மண்ணை அள்ளி வீசி சாபமிடுவோம்.

வெகு தூரத்தில் இருக்கும் குலதெய்வம் கோவிலுக்கு போகும் பழக்கம் உள்ளவர்கள், அந்த தெய்வம் இருக்கின்ற இடத்திலிருந்து மண்ணெடுத்து அந்த தெய்வம் நம்மோடும் நம்மிடம் இருக்கும் மண்ணோடும் பயணிப்பதாக நம்பிக்கை கொண்டு பிடி மண் எடுத்து வந்து நாம் இருக்கும் பகுதியில் வைத்து கோவில் கட்டி வழிபடுவோம். அடுத்ததாக வயதான காலத்தில் உடல் நலக் குறைவாக பெரியவர் ஒருவருக்கு உயிர் பிரிய காலதாமதமானால், இந்த மண்ணை விட்டு போக அவருக்கு மனம் இல்லை.

எனவே கொஞ்சம் மண்ணை எடுத்து கரைத்து அவர் வாயில் புகட்டுங்கள் என்பார்கள். அவரும் இரண்டோர் நாளில் இறந்து விடுவார். ஆக பிறப்பு முதல் இறப்பு வரை இந்த மண் நம்மைத் தொடர்கிறது.

நமது பிறப்பு முடிந்தபிறகு இந்த மண் நம்மை ஆள்வதால் தான் மண்ணின் மைந்தர்கள் என்று ஆகிறோம். ஆகவே இந்த மண் பயனுற நாம் நமது வாழ்க்கை முறையை அதற்கேற்ப தகவமைத்துக் கொள்வது அவசியம். கடையேழு வள்ளல்களான பாரி, காரி, ஓரி, ஆய் அண்டிரன், அந்நியன், நள்ளி , பேகன் போன்றோரை நீங்கள் அறிவீர்கள். இவர்கள் அனைவருமே மிகச் சிறந்தவர்கள் தான். ஆனால் புறப்பொருள் வெண்பாமாலை என்ற நூல் இருவரை மட்டும் சிறப்பித்து கூறுகிறது.

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்-தொல்லை

இரவாமல் ஈத்த இறைவன்போல் நீயும் கரவாமல் ஈகை கடன்" முல்லைக்கு தேர் கொடுத்த பாரி, நாடு கொடுத்த ஓரி குதிரை கொடுத்த காரி மயிலுக்கு போர்வை கொடுத்த பேகன் தனக்கு கிடைத்த அரிய நெல்லிக்கனியை புலவர்க்கு கொடுத்த அதியமான் தன்னிடம் உதவி கேட்டு வருபவர் வருங்காலத்தில் வேறுயாரிடமும் உதவி கேட்காத அளவிற்கு அள்ளிக்கொடுத்த நள்ளி தன்னிடம் உதவி வேண்டி வந்தவர்க்கு ஊரையே தானமாக கொடுத்த ஆய் போன்ற கடைஏழு வள்ளல்களில் 5 பேர் உதவி என்று கேட்டவர்களுக்கு மட்டுமே உதவினார்கள்.

மயிலுக்கு போர்வை போர்த்திய பேகனும்,
முல்லைக்கு தேர் கொடுத்த பாரியும்
மனிதன் அல்லாத பிற உயிரினங்களுக்கு,
அது கேட்காமலே உதவினார்கள்.

அதனால்தான் இந்த இரண்டு பேரும் மிகச் சிறந்தவர்களாக பாராட்டப்படுகிறார்கள். ஒருவர் நம்மிடம் ஒரு உதவியைக் கேட்டுப் பெறும்போது அவர் தன்னுடைய தன்மானத்தை இழக்கிறார். ஒருவர் கேட்குமுன் அவருடைய வறுமை அறிந்து நாமாக உதவும் போது அவருடைய மானத்தையும் காத்தவராகிறோம். உதவி செய்வதில் கூட பெறப்படுபவரின் மனநலனைக் காக்கும் தன்மை நம் தமிழ் மண்ணின் குணமாக இருக்கிறது. அதனால் தான் நம் தமிழர்கள் எந்நாடு சென்றாலும் தமிழ்ப் பண்பாட்டையும் பத்திரமாக கொண்டு செல்கிறார்கள். அத்தகு சிறப்பு கொண்ட பாரதி கலை மன்றத்திற்கு தமிழ் மண்ணின் சார்பாக மனம் நிறைந்த வாழ்த்துகள்.



கடல் பயணங்களும் மற்றும் மொழி பரிணாமமும்

WAVE Theory: Worldwide Ancient Voyages and Evolution Theory

20,000 வருடங்களுக்கு முன் பெரும் பனி உருகி 450+ அடிகள் கடல் நீர்மட்டம் உயர்ந்த போது (குமரிக்கண்டம் இருந்திருந்தால் இந்த நேரத்தில் தான் அதன் பெரும் பகுதியைக் கடல் கொண்டிருக்கும்) கடல் கொண்ட பழந்தமிழகத்தின் தலைசிறந்த கடலாடிகளும் அரசர்களும், அவர்தம் படைவீரர்களும் பெரும் மரக்கலங்களில் ஏறி கடல் நீரோட்டத்தில் (Ocean current) புலம் பெயர்ந்த பொழுதில், தமிழ் ஜெர்மானிய மொழிகளின்

ஆரம்பத்திற்கு வித்திட்டது என்பதே என் கோட்பாடு.

இது தொடர்பான அறிவியல் ஆதாரங்களையும் அவ்வப்போது பதிவிடவும் போகிறேன்.

தமிழ்: உலக மொழிகளின் தாய்மொழி

தமிழ், உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்று. உலகத்தின் பல மொழிகளும் தமிழின் வேர்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதன் தொன்மையும் பல்வேறு மொழிகளுக்குப் பங்களித்துள்ள சுவையும், தமிழின் பெருமையை இன்னும் உயர்த்துகின்றன. இங்கு தமிழின் பெருமையைச் சுட்டிக்காட்டும் சில அற்புதமான எடுத்துக்காட்டுகளை பார்ப்போம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எழுத்தெல்லாம், இந்த "எழுத்து" என்ற தமிழ்ச் சொல்லை வாயில் வெற்றிலை போடுபவரைச் சொல்லச் சொல்லி அதை ஆங்கிலத்தில் "எழுதினால்" எப்படி இருக்கும் என்று யோசித்து பாருங்கள்.

அதாவது “Lettu” என்று வரும்! இந்த சொல்லை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதா? Letter என்ற ஆங்கில சொல் தானே அது.

Letter என்ற சொல்லின் மூலத்தை Etymology-யில் தேடினால், அது லத்தீன் மொழியில் இருந்து வந்தது என்கிறார்கள். ஆனால், லத்தீன் மொழிக்கு அது எங்கிருந்து வந்தது என்பது தெரியவில்லை என்று தான் எழுதியிருக்கிறார்கள்!

ஆனால் நமக்குத் தெரியும்: எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று சங்க இலக்கியம் சொல்வது போல், தமிழின் தொன்மை மட்டுமே இதற்குப் பின் தோன்றும் எல்லா மொழிகளுக்கும் அடிப்படையாக உள்ளது.

letter (n.1)

c. 1200, "graphic symbol, alphabetic sign, written character conveying information about sound in speech," from Old French *letre* "character, letter; missive, note," in plural, "literature, writing, learning" (10c., Modern French *lettre*), from Latin *littera* (also *litera*) "letter of the alphabet," also "an epistle, writing, document; literature, great books; science, learning;" a word of uncertain origin.

தமிழின் வேர்கள்: தொன்மையின் சாட்சியம்

தமிழில் இருந்து பிற மொழிகளுக்கு சென்ற சொற்கள் ஏராளம், ஏராளம், அவை அனைத்தும் தமிழின் தொன்மையை உணர்த்துகின்றன.

Facebook Oculas நமக்கு எல்லாம் தெரியும். அது Occular என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டது.

ocular (adj.) -"கண்களுக்கேற்ப அல்லது கண்களைச் சார்ந்தது" என்று பொருள் கொள்ளும். இது Late Latin மொழியில் ocularis (கண்களுக்கான) என்று, Latin மொழியில் oculus (கண்) என்று இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இதன் மூலத்தை Proto-Indo-European (PIE) மொழியின் okw- (பார்ப்பது) என்ற வேர்ச்சொல்லுடன் தொடர்புபடுத்துகிறார்கள்.

ஆனால், நமக்குத் தெரியும்: இந்த ocular என்ற சொல் தமிழ் சொல்லான நோக்கல் என்பதிலிருந்து உருவானது.

சங்க இலக்கியத்தில்,

சூர் புகல் அடுக்கத்து பிரசம் காணினும்
ஞெரேரென நோக்கல் ஓம்புமின் உரித்து அன்று - மலை 239,240

நோக்கல் என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழில் நோக்கல் என்பது பார்த்தல் (seeing) என்ற பொருள் தருகிறது. இதன் தொன்மை இன்று ocular என்ற ஆங்கிலச் சொல்லின் அடிப்படையாக விளங்குகிறது.

நோக்கு என்ற சொல்லில் உயிர் ஆர்ப்பரித்து (N) Occu என்று திரிந்ததைப் போல திரிந்த மற்றொரு வார்த்தைதான் Odur.

Odrum or Odrus என்று மேற்கத்திய மொழிகளில் அமர்ந்துள்ளது. இப்போது இங்கு வலுவிழந்த N ஐ சேர்த்தால் (N)odrus -நாற்றம்

நாற்றமுறைக்கும் மலருண்மை கூறிய என்ற சொற்றொடர் நியாபகம் வருகிறதா?

odor (n.)

c. 1300, "sweet smell, scent, fragrance," from Anglo-French *odour*, from Old French *odor* "smell, perfume, fragrance" (12c., Modern French *odeur*) and directly from Latin *odor* "a smell, a scent"

என்னப்பா Technology எங்கயோ போயிட்டு இருக்கு..இந்த கம்பி கட்டுற கதையெல்லாம் எங்கக்கிட்ட வேண்டாம் னு நீங்க சொல்லவந்தா..... கொஞ்சம் பொறுங்க...இந்த Technology யே தமிழ் தந்த வார்த்தை என்றால் அதிர்ச்சிக்குள்ளாவீங்களா மாட்டீங்களா?

ஆங்கில அகராதியில் இருந்து ஆரம்பிப்போம். நான் சொல்வதை விட Google சொன்னால் நம்பிக்கை அதிகமாகும். Google ல் Origin of Technology என்று கேட்டால் அது Greek மொழியின் வழி வந்தது என்று இருக்கும். Greek மொழி அகராதியில் தேடினால்... The Ancient Greek noun tekton (**τέκτων**) *is a common term for an artisan/craftsman, in particular a carpenter, wood-worker, or builder என்று வரும். மொழி வேர்ச்சொல் ஆய்வாளர்கள் இந்த Teckton இந்திய வடமொழி தக்க்ஷன் என்ற சொல்லுக்கு இணையானது என்பதோடு நிறுத்தி இருப்பார்கள்...அதற்கான மூலம் தெரியாமல்*

ocular (adj.)

c. 1500, "of or pertaining to the eye," from Late Latin *ocularis* "of the eyes," from Latin *oculus* "an eye," from PIE root ***okw-** "to see." As a noun, "eyepiece of an optical instrument," 1835, from the adjective.

also from **c. 1500**

*PIE hypothetical (புனையப்பட்டது) root word *Tkew என்று மேற்கொண்டு தொடரமுடியாமல் முட்டுச்சந்தில் நின்றிருப்பார்கள்.*

நமக்கு தெரியும் தறி என்ற வினைச்சொல் வெட்டுதல் மற்றும் அழகுற இணைத்தல் என்ற பொருளுடனும் வரும். தறி என்ற பெயர்ச்சொல் உங்களுக்கு உங்களுக்கு மற்றுமொரு பேரதிர்ச்சியை தரும் ஆங்கிலச்சொல் அதை இன்னொரு நாள் பார்க்கலாம். மரப்பலகைகளை வெட்டி அழகுற இணைப்பவன் தறித்த(வ)ன்.

Dr.சுவாமிநாதன் சுப்பிரமணியன்

படித்தவன்..படிச்சவன்.. கடித்திட்டான்...கடிச்சிட்டான் என்று தகரம் சகரமாக திரிவது வழக்கத்தில் இருந்ததால், தறித்தன் >> தறிச்சன் என்றும்..றிகரம் மறைந்து தச்சன் என்றும் ஆனது. ஆதாரத்திற்கு சங்க இலக்கியத்திற்கு போவோமா!

வைகல் எண்டேர் செய்யுந் தச்சன் திங்கள் வலித்த காலன் னோனே !

திணை:தும்பை. துறை: தானை மறம். அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

ஒருநாள் எட்டுத் தேரைச் செய்யும் தச்சன். இப்போது ஒத்துக்கொள்கிறீர்களா!

தச்சன் - τέκτων (Greek) - TEKTON - TECHNIC -TECHNOLOGY ஆகிவிட்டது

புதுப்புது Technology வந்தாலும் ...அந்த Technology என்ற சொல்லைத் தந்தது நம் தமிழ் மொழியே!

நேற்று Night மெய்யப்பன் Sir இல்லத்தில் நண்பர்களுடன் திருவாசகம் படித்து சுவைத்துவிட்டு அப்படியே அவர்கள் வீட்டு Dinner யும் சுவைத்துவிட்டு நிசியில் வீடு வந்து சேர்ந்தோம். ஏம்பா தமிழில் எழுதும் போது ஆங்கில வார்த்தைகளை தவிர்க்கலாமேனு நீங்க சொல்ல நினைச்சிங்கனா.. நிற்க! மேலே நான் எழுதிய அனைத்தும் தமிழ் சொற்களே

Night, Sir, Dinner இவை மூன்றும் தமிழின் வேரிலிருந்து முளைத்தவை. இங்கு Night ஐ மட்டும் பார்ப்போம். Sir யும் Dinner யும் இன்னொரு நாள் பார்த்துக்கலாம்.

Night என்ற வார்த்தை ஆதி கால ஜெர்மானியக் காட்டுக்குடிகள் பயன்படுத்திய சொல். இவர்கள் 3000 வருடங்கள் பழமையான குடிகள் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். அவர்கள் கிரேக்கர்கள் கிடையாது (Old Germanic was an independant clan) ஆனால் நிறைய கிரேக்க சொற்களும், பழைய ஜெர்மானிய ஆதிகுடிகளின் சொற்களும் ஒரே ஒலிக்குறி மற்றும் பொருள்பட இருக்கும்..இவை எல்லாம் ஆதி மாந்தரெல்லாம் ஓர் மொழியில் இருந்து வந்தவர்கள் என்ற தேற்றத்தை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது. சரி, நாம் Night கதைக்கு வருவோம். இந்த காட்டுக்குடிகள் இரவை Nicht (நிசிட்) என்று சொன்னார்கள்.கிரேக்கர்களும் (நிசிட) என்று சொன்னார்கள். ஆகா. நிசிட...நிசிட்...நமக்கு பொறிதட்டுமே...

“நடுநிசியில் கதவை தட்டினான்” னு எத்தனை ராஜேஷ்குமார் நாவலில் படித்து இருப்போம்.

ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும் காலை மலமொடு கடும்பகல் பசி நிசி வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்..என்று திருவாசகத்திலும் நிசியைப்பார்க்கலாம்.

நிசி (தமிழ்) - Νύχτα (Greek), Nicht (old Germanic) - Nacht (German) -Night (English)

ஞாயிற்றுக்கிழமை, வீசு தென்றலும் வீங்கிள வேனிலுமாக நாவுக்கரசர் சொன்னதைப்போன்ற ஓர் அருமையான பகல் பொழுதைக் கழித்துவிட்டு இரவு படுக்கும்முன் திரைப்படப்பாடல் ஒன்றைக் கேட்டுக்கொண்டே தூங்கலாம் என்று பாடலைப் போட இசைஞானி இளையராஜாவின் இசையில்...

'பூவில் வண்டு கூடும்
கண்டு பூவும் கண்கள் மூடும்
பூவினம் மாநாடு போடும்
வண்டுகள் சங்கீதம் பாடும்"

அப்படியே நக்கீரரின் ஆற்றுப்படையில்

"முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள் கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்"

வர்ணனையை ஒத்த மிக எளிமையான மற்றும் இனிமையான இந்தப்பாடலைக் கேட்டதும் என்னையுமறியாமல் *Old is Gold* என்று தமிழ் ஈந்த சொற்களில் சொன்னேன்.

ஆமாம், *Old* ம் தமிழே! *Gold* ம் தமிழே! இன்று *Old* ஐ மட்டும் பார்ப்போம். *Gold* ஐ இன்னொருநாள் பார்க்கலாம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் கொடுந்திரை மீண்ட தென்னாட்டினர் வடக்கேறி பல்வேறு ஆற்றங்கரைகளில் நாகரீகங்களை மீட்டு எடுத்தபோது உடுத்தும் உடையும், உண்ணும் உணவும் ஏன் மெய் நிறமும் மாறின போதும் கூட பழையவற்றை அதாங்க நம்ம ஊரு பழசையும், பெருசையும் மறக்காமல் Παλιός- *Palios (Greek)* பழயசு என்று கிரேக்கத்திலும், *Proto-Indo-European* மொழியில் *h₂eltós கிழடோச - *grown, tall, big* என்ற பொருளிலும் (தெரிந்த வார்த்தைகளாக இருக்கிறதா?)

பின்னர் *Proto-Germanic* மொழியில் *aldaz ("grown-up என்ற பொருளில்"), பிறகு நூற்றாண்டுகளில் மென்மேலும் மருகி *Old English* ல் *ald, eald ("old, aged, ancient, antique* என்ற பொருளில்") என்றும் பின் *Middle English* ல் *olde, ald* என்றும்

கடைசியாக,இன்றைய ஆங்கிலத்தில் *OLD*- வயதான/ நாள்பட்ட /பழைய என்ற பொருளிலும் நம் தாய் தமிழ் வலம் வந்து கொண்டு இருக்கிறாள்.

நம் தாய் தமிழ் *Old* ஆனாலும் *Gold* தான் இல்லையா!

"உலக மொழிகளின் தாய்மொழி தமிழே" என்பது வெறும் சொல்லில் மட்டுமல்ல, மெய்யான உண்மையிலும் வெளிப்படுகிறது. தமிழின் சொற்களான நாற்றம், தச்சன், நிசி போன்றவை உலக மொழிகளில் இடம்பிடித்துள்ளவை. இவை தமிழின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் நீண்ட வரிசையின் சில உதாரணங்கள் மட்டுமே.

தமிழ் உலக மொழிகளின் தாய்மொழி, அதன் பெருமை அதன் ஒவ்வொரு சொல்லிலும் ஒளிர்கிறது.

நடைபாதையில் என் நிழலாய் வந்தாள்

நடந்தேன் வியப்பில்
நம்பிக்கை வளர்த்தாள்
நக நுனி அளவும் கள்ளம் இல்லை அவளிடம்
நரை கூடிய பின்னும் உடன் இருப்பேன் என்றாள்
நானும் பேச தொடங்கினேன்
நாணம் மருனொடி பூண்டாள்
நொடி பொழுதும் பிரியவில்லை
நடக்காதீர்கள் என்னை விட்டு என்றாள்
நட்பு காதலாக வளர்ந்தது
நரம்பிலும் உயிரிலும் கலந்து விட்டாள்
எப்படி போவேன் என் தமிழை விட்டு!!"
-கார்த்திக் பாலசுப்பிரமணியன்

கார்த்திக்
பாலசுப்பிரமணியன்

கோடை விடுமுறை: 1980 vs 2025

1980 களில் கோடை விடுமுறை

1980 to 90 -ஆம் ஆண்டு. தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்த ஒரு சிறிய கிராமம் *Kalampatti near Kovilpatti*. கோடை விடுமுறை என்றாலே மனதிற்குள் ஒரு ஆனந்தம், ஒரு குதூகலம். *Late 80*களில் நான் நான்காம் அல்லது ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த காலம் அது. எப்போது மே மாதம் வரும் என்று காத்திருப்போம். ஏனென்றால், அப்போதுதான் சித்தப்பா அத்தை மாமா சொந்தங்கள் ஊருக்கு செல்ல , மிக விரைவு பேருந்தில் பயணம் செய்யும் வாய்ப்பு கிடைக்கும்.

செல்வகுமார்
சாத்துரப்பன்

சொகுசு பேருந்து பயணம்

, இன்று தமிழ்நாட்டில் *TNSTC* என்று ஒரே ஒரு போக்குவரத்து கழகம் தான் உள்ளது. அன்று தமிழ்நாட்டில் போக்குவரத்து கழகங்கள் தனித்தனியாக இருந்தன: ஒவ்வொரு போக்குவரத்து கழகம் *Bus* , வேற வேற கலரில் இருக்கும் . திருநெல்வேலியில் கட்டபொம்மன், மதுரையில் பாண்டியன், நீண்ட தூர பயணங்களுக்கு திருவள்ளுவர். சொகுசு பேருந்து என்றால் திருவள்ளுவர் போக்குவரத்து கழக பேருந்துகள் தான். விடுமுறை நாட்களில் நண்பர்களிடம் பெருமிதமாக சொல்வோம், “திருவள்ளுவர் சொகுசு பேருந்தில் பயணம் செய்தோம்” என்று.

ஒருமுறை என் தந்தையுடன் சிவகாசியில் உள்ள அத்தை வீட்டிற்கு சென்ற பயணம், பேருந்து நிலையத்தில் காத்திருப்பது, பசுமை வயல்கள், ஜன்னல் வழியாக வீசும் காற்று, கிராமத்து மக்களின் எளிய வாழ்க்கை—*all unforgettable.* அத்தை வீட்டில் கிடைத்த அன்பும், சுவையான உணவும், அந்த விடுமுறையை மேலும் இனிமையாக்கின.

கோடை திருவிழா

அந்த ஊரில் கோடை திருவிழாவில் பங்கேற்று பொங்கல் வைத்து சாப்பிட்டது இன்றும் நினைவில். நண்பர்களுடன் கில்லி தண்டா, பம்பரம், கிரிக்கெட்—*all gave joy and energy. Sattur lil* உள்ள

சித்தப்பா வீட்டிற்கு செல்லும் போது தியேட்டரில் தலைவரின் "தர்மதுரை" படம் பார்த்தது, இன்றும் நினைவில் உள்ளது.

திருவிழா நாட்களில் நண்பர்களுடன் கில்லி தண்டா பம்பரம், கலர் கலராக பம்பரம் வாங்குவதற்கு நண்பர்களுடனும் தம்பிகளுடன் போட்டி இருக்கும் . ஒவ்வொரு கோடை விடுமுறையும் ஒரு புதிய அனுபவத்தையும் புதிய நினைவுகளையும் தந்தது .

கோடை விடுமுறையில் காளாம்பட்டி கிரிக்கெட் டோர்மெண்ட் நடக்கும்

வயலின் நடுவே ஒரு மைதானம்

கிராமத்தின் நடுவே, பழைய பள்ளி அருகே ஒரு வெறும் நிலம். அதுவே மைதானமாக மாறியது.

ஆனால் அப்பொழுதே காளாம்பட்டி *school ground* ஐ *cricket tournament* விறுக்காக ரெடி பண்ண செட்டிக்குறிச்சி *il* இருந்து, மணல் மாட்டு வண்டியில் எடுத்து வந்து , *school ground* லில் *2 to 4* இன்ச் *pitch* யை தோண்டி செம்மண் நிரப்பி சமன் செய்வோம். மற்றும் கதிர் அடிக்கும் *Roller* வைத்து நன்றாக *Pitch* ஐ சமன் செய்து *Tournament* நடத்த *ready* ஆவோம். *Tournament ground ready* மற்றும் அந்த *Pitch* லில் *match* விளையாட ஆவலோடு இருந்தோம்.

எல்லாமே ஒரு கிராமத்து கிரிக்கெட் கலை. ஒவ்வொரு கிராமமும் தங்கள் வீரர்களை தேர்ந்தெடுத்து, "நம்ம கிராமம் தான் ஜெயிக்கணும்" என்ற உற்சாகத்தில் வந்திருந்தது.

கிராமத்து வாழ்க்கை , அதன் எளிய அழகும் , பம்பு செட்டு குளியல் கிணற்று குளியல் , மக்களின் அன்பும் என்றும் என் மனத்தில் பசுமையாக உள்ளது.

2025களில் கோடை விடுமுறை 2025
– கலிபோர்னியா பயணம்

2025 கோடை விடுமுறையில் என் குழந்தைகளுக்கு என்ன ஒரு அனுபவத்தை தர முடியும் என்று யோசிக்கும் பொழுது , நாம் இருப்பது அமெரிக்காவின் மதுரை மண்ணில் , இங்கே நம் சொந்தங்கள் நண்பர்கள் தானே , சரி, என்று ஒரு இரண்டு ஊரை நானும் என் மனைவியும் முடிவெடுத்தோம்.டெக்சாஸ் டல்லாஸ் - நண்பன் சுரேஷ் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கி, *Grandscape* பொழுதுபோக்கு தளத்தில்

Go-Karting, Arcade. ஆகாஷ் & ஹாசனா மகிழ்ச்சியாக விளையாடினர்.

அடுத்து கலிபோர்னியா பயணம் – சான் டியாகோ, லாஸ் ஏஞ்சல்ஸ், சான் பிரான்சிஸ்கோ.

2025 – கலிபோர்னியா பயணம்

அடுத்து கலிபோர்னியா , *Houston* இருந்து *flight* – *San Dieago* வந்து , *then San Dieago to* சான் பிரான்சிஸ்க்கு காரில் புறப்பட்டோம்.

நாங்கள் எடுத்த பாதை – *Route 5, 101* மற்றும் *1* – ஒவ்வொன்றும் தனித்துவமான இயற்கை அழகை கொண்டது.

Route 5 – பரந்த பசுமை புல்வெளிகள்

Route 5 வழியாக நகரும் போது, கிழக்கு பக்கத்தில் பரந்த பசுமை புல்வெளிகள் கண்ணைக் கவர்ந்தன. வெயிலின் ஒளியில் பொலிந்த கோடைக்கால வயல்கள், கால்நடைகள் மெதுவாக நடமாடும் காட்சிகள் –

Route 101 – மலைகளின் மடியில்

Route 101-ல் நுழைந்ததும், இயற்கையின் மறு முகம் திறந்தது. மலைகள் அருகில் வந்து நின்றன. அவற்றின் மேல் பச்சை மரங்கள், இடையிடையே பாறைகள், சில இடங்களில் மழைமுகம் கொண்ட மேகங்கள்

மலைவழி சுழற்சி சாலையில் ஓடும் போது, ஒவ்வொரு திருப்பத்திலும் ஒரு புதிய காட்சி. சில இடங்களில், சாலையின் ஓரத்தில் நீர்வீழ்ச்சி போல ஓடும் சிறு நீரோடைகள் –

Route 1 – கடற்கரையின் காதல்

Route 1-ல் நுழைந்ததும், கடல் காற்று வரவேற்றுது.

பசுமை மலைகளின் பின்னணியில் நீல கடல் பரந்து கிடந்தது. சாலையின் ஒரு பக்கம் கடல், மறுபக்கம் மலை - கடற்கரையின் அருகே ஓடும் போது, அலைகள் காற்றுடன் சேர்ந்து இசைபோல் ஒலித்தன. சில இடங்களில், கடற்கரை பாறைகள் மீது மோதும் அலைகள் - இயற்கையின் ஆவேசம் போல இருந்தது.

சான் பிரான்சிஸ்கோ

சான் பிரான்சிஸ்கோ நகரம் நெருங்கும் போது, *Golden Gate Bridge* தொலைவில் தெரிந்தது. கடல், மலை, நகரம் - மூன்றும் ஒன்றாக இணைந்த அந்த தருணம், பயணத்தின் உச்சம்.சான் பிரான்சிஸ்கோவில் நண்பன் முரளி வீட்டில் தங்கி, *Golden Gate Bridge, Pier 39, Downtown* சுற்றிப் பார்த்தோம்.

அதன் பின்பு சான் பிரான்சிஸ்கோ *to* சாண்டியாகோ காரில் திரும்பினோம். சான் டியாகோவில் *La Jolla* கடற்கரை, *America's second-largest zoo, Skyfari aerial ride* - குழந்தைகளுக்கு ஒரு பயணம்.

கலிபோர்னியாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள சான் டியாகோ நகரம், இயற்கையின் அழகு, மனித கலை, மற்றும் விலங்குகளின் உலகம்—*all in one.* *La Jolla* மலையில் அமைந்த கடற்கரை, ஐரோப்பிய நகர வடிவமைப்பை நினைவுபடுத்தியது.

La Jolla கடற்கரை - கடலின் காதல் மொழி

கடற்கரையின் அருகே நடந்து செல்லும் போது, சில நேரங்களில் *Sea Lions* ஓய்வெடுக்கும் காட்சியும், சின்னச் சின்ன பாறைகளில் விளையாடும் குழந்தைகளும்—*all added charm to the moment.* நீல நிறத்தில் பரந்த கடல், பாறைகளின் மீது மோதும்

அலைகள், கடற்கரையில் சூரிய ஒளியில் பொலியும் மணல்—*all gave a sense of peace and wonder*

San Diego Zoo - விலங்குகளின் உலகம்

அமெரிக்காவின் இரண்டாவது பெரிய விலங்குக் காட்சியகம் - *San Diego Zoo*.ஒவ்வொரு பகுதியிலும் உலகின் பல பகுதிகளில் இருந்து வந்த விலங்குகள் - பாண்டா, ஜிராஃப், கோடிகள், புலிகள் - அனைத்தும் இயற்கை சூழலில் வாழும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன.*America's second-largest zoo, Skyfari aerial ride* - குழந்தைகளுக்கு ஒரு கனவுப் பயணம். *Zoo*-வில் *Skyfari aerial ride* என்பது ஒரு மாயம். ஒரு சிறிய கம்பியில் தொங்கும் காபினில் ஏறி, வானில் பறந்து *Zoo*-வின் முழு காட்சியையும் மேலிருந்து பார்ப்பது ஒரு வித்தியாசமான அனுபவம்.

இந்தப் இரண்டு பயணத்தில் நண்பர்களின் வீடுகளில் உணர்ந்த விருந்தோம்பல், அன்பும் பாசமும் நிறைந்திருந்தது. நாம் அடுத்த பயணத்தில் சந்திப்போம்.

நம் பாரதி

பெண்ணியம் பேசி
கண்ணியம் காத்த
தமிழ்தாயின் தவப்புதல்வன்
பாரதிக்கு பிறந்த நாள்

கற்பு எனும் ஆயுதம் கொண்டு
இதயத்தை கிழித்து
தன்மானம் சிதைத்து
திறமைகள் மறைத்து
சிறையினில் அடைத்து
வீட்டுச் சிறையினில் அடைத்து
விறகில் வெந்து
விந்தினைச் சுமந்து
வாரிசு சுமக்கும்

வேலைக்காரியாக வாழ்ந்து
வேலை வந்ததும் இறக்கும்
அழகான அடிமைகளாய்
மட்டுமே இருந்த
பெண்களின்
அடிமைச் சங்கிலியை
அறுத்து எறிந்து
ஆணுக்கு இணையாய்
அனைத்து பணியிலும்
சம உரிமை கிடைக்க
பாடல் வரிகளால்
பாரதத்தின் பார்வையை
தன் பக்கம் திருப்பியவன்
நம் பாரதி...!!!

மூட நம்பிக்கை பேசி
முடமாக்கி பெண்களை
முடக்கி வைத்தோரை
இடம்தெரியாது விரட்ட
கடமையாய் கவிதை பாடியவன்
நம் பாரதி...!!!

கீழ்சாதிப் பையனோடு
என் மகள் ஓட வேண்டும்
அவனையே திருமணம் செய்வேன்
என்றவள் கூறும்
செய்தி கேட்டு நான்
ஆனந்தத்தில் குதிக்க வேண்டும்
என்று எழுதிய
பெண்மைப் புரட்சியாளன்
நம் பாரதி...!!!

பாரதியை விட
பெண்ணியம் பேசுவோர்
எவரேனும்
இவ்வுலகில் உண்டோ???

பாரதத்தாய் ஈன்றெடுத்த
பாரதியே உனக்கு
பிறந்த நாள் பா எழுதிட
திறந்த என் பேனாவும்
கண்ணீர் வடித்தது
கவிதை வரிகளாய்...!!!!
#வாஞ்சிவரிகள்#

வாஞ்சி கோவிந்த்

decor
one
Mandaps • Decor • Linens • Floral • Graphics

GOLD
SPONSOR
AUTHENTIC
Kumar's
INDIAN FOOD
The Symphony of
South Indian
Flavors and Spices.
834 454 3806
WWW.KUMARMESSHOUSTON.COM

என் வீட்டுத் தோட்டத்தில்

ஹூஸ்டன் மாநகரில் குடிபெயர்ந்து பதினொன்று வருடங்களுக்கு மேல் ஆகிறது. இங்கு தனி வீடு என்றிருந்தால் கண்டிப்பாக ஒரு நியாயமான அளவில் ஒரு கொல்லைப்புறம் இருக்கும். அதே போல் தான் எங்களுக்கும் ஒரு கொல்லைப்புறம். நண்பர்களின் தோட்டங்களை பார்த்து ஆசை ஆசையாய் நான் வளர்த்து வரும் செடி கொடிகளை பற்றி உங்கள் அனைவரிடமும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி.

நம் ஊரில் ஒவ்வொரு வீதியிலும் வேப்பமரம் காண்பதுண்டு. எனது அப்பாவின் சொந்த ஊர் சமயபுரம் என்பதாலோ என்னவோ எனக்கு வேம்பின் மேல் ஒரு பக்தி கலந்த காதல் உண்டு. வேம்பின் மேல் உள்ள பக்தி இன்னும் அதிகமாகிய தருணம் இங்கு ஹூஸ்டனில் எனக்கு ஒரு வேம்பு மரக்கன்று கிடைத்தது தான். இந்த வேப்பமரத்தின் கதை என்னவென்றால் சுமார் முப்பது வருடங்களுக்கு முன் நமது மீனாட்சி திருத்தலத்தில் இருந்த திரு ராஜரத்தினம் பட்டர் அவர்கள் அங்கு கோவிலில் இருந்த வேப்பமரக்கன்றுகளை பக்தர்களுக்கு வழங்கியுள்ளார். அந்த கன்றுகள் இன்று பல்வேறு



கௌசல்யா சங்கர் நம்பி

பக்தர்களின் இல்லங்களை வாசம் செய்து கொண்டிருக்கும். ஒன்பது வருடங்களுக்கு முன்னால் திருமதி லீலா ஆன்டி மூலம் எனக்கு ஒரு வேப்பமரக் கன்று கிடைத்த அந்த மரம் தான் இன்று என் வீட்டில் வாசம் செய்து கொண்டிருக் கிறது. வேப்பமரம் வெப்பத்தை தவிர்க்கும் மருத்துவ குணம் கொண்டது மற்றும் மேலும் பல நன்மைகள் கொண்டது என்பது உலகறிந்த விஷயம்.

வேப்பமரம் தவிர முருங்கை, வாழை, கொய்யா, அத்தி, மாதுளை, மருதாணி, துளசி, வல்லாரை, வெற்றிலை, கற்றாழ, கருவேப்பிலை, பொன்னாங்கண்ணி, அவரைக்காய், பிரண்டை, பூசணி, தோசைக்காய் என பல செடி கொடிகள் என் தோட்டத்தில் இருக்கின்றன.

முருங்கைக்கீரை, மருத்துவ குணங்கள் நிறைந்த ஒரு கீரையாகும். இது பல்வேறு உடல்நலப் பிரச்சனை களுக்கு தீர்வாக அமைகிறது. குறிப்பாக, இதில் இரும்புச்சத்து, கால்சியம், வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளன, இவை உடலுக்கு பல நன்மைகளை அளிக்கின்றன. முருங்கைக்கீரை ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவுகிறது. முருங்கைக்கீரை இதயத்தை ஆரோக்கிய மாக வைத்திருக்க உதவுகிறது. முருங்கைக்கீரையை சூப் செய்து குடித்தால், சளி மற்றும் இருமல் போன்ற சுவாசக் கோளாறுகளைக் குணப்படுத்த உதவும். முருங்கைக்கீரை வயிற்றுப் புண் மற்றும் செரிமான பிரச்சனைகளை குணப்படுத்த உதவுகிறது. முருங்கைக் கீரையை தினமும் உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம் மேற்கூறிய நன்மைகளை பெறலாம்.

அத்திப்பழத்தின் நன்மைகள் பல. இது மலச்சிக்கலைத் தடுக்கிறது, செரிமானத்திற்கு உதவுகிறது, இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது, இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது, மேலும் சில வகையான புற்றுநோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவும் ஆன்டி ஆக்சிடன்ட் களைக் கொண்டுள்ளது. இதில் உள்ள பொட்டாசியம், இதயத்துடிப்பை சீராக வைத்திருக்க உதவுகிறது மற்றும் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவு கிறது,அத்திப்பழத்தில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள், புற்றுநோய் செல்கள் உருவாவதைத் தடுக்க உதவும். நார்ச்சத்து அதிகம் உள்ளதால், நீண்ட நேரம் வயிறு நிறைந்த உணர்வைத் தந்து, எடை இழப்புக்கு உதவும்.

கறிவேப்பிலையின் நன்மைகள் ஏராளம். இது செரிமானத்தை மேம்படுத்துகிறது, கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்க உதவுகிறது, இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

வெள்ளை பூசணிக்காய் பலவித நன்மைகளைக் கொண்டுள்ளது. உடல் எடை குறைக்க, உடல் சூட்டை தணிக்க, செரிமானத்தை மேம்படுத்த, மற்றும் சரும ஆரோக்கியத்திற்கு நல்லது. மேலும், இது சிறுநீரகங்களுக்கு நல்லது மற்றும் உடலில் உள்ள அழுக்குகளை நீக்க உதவும்.

கற்றாழை, சருமம் மற்றும் கூந்தல் ஆரோக்கியத்திற்கு பல்வேறு நன்மைகளைக் கொண்டுள்ளது. இது சருமத்தை ஈரப்பதமாக்குகிறது, பொடுகு மற்றும் அரிப்புகளைக் குறைக்க உதவுகிறது, மேலும் முடி வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. கற்றாழையில் உள்ள மருத்துவ குணங்கள் காரணமாக, இது பல தோல் பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது, மேலும், உடல் ஆரோக்கியத்திற்கும் நல்லது,

பிரண்டை, ஒரு மருத்துவ மூலிகையாகும், இது பல உடல்நலப் பிரச்சனைகளுக்கு தீர்வு தரும் என நம்பப்படுகிறது. குறிப்பாக, மூட்டுவலி, கை, கால் வலிகளைக் குறைக்க உதவுகிறது. காய் கனிகள் தவிர செம்பருத்தி ஜாதிமல்லி மல்லிகை அந்தி மந்தாரை சூரியகாந்தி என பூக்களும் எங்களுடைய தோட்டத்தை அலங்கரிக்கின்றன.

தினமும் காலை மாலையில் என் செடி கொடிகளுடன் பேசுவது எனக்கு பிடித்தமான ஒன்று. செடிகளுடன் பேசுவது அவைகளுக்கு ஒரு புத்துணர்வு தருவதோடு நமக்கும் மனதிற்கு ஒரு அமைதி கொடுக்கும்.

என்ன தான் நாம் பராமரித்தாலும் குளிர் காலத்தில் அனைத்து செடிகளும் வாடி போகும் போது மனதிற்கு மிகவும் கனமாக இருக்கும். அதனை தவிர்க்க அனைத்து செடிகளையும் வீட்டிற்குள் எடுத்து வந்து பாதுகாத்து வளர்ப்பது அதிக உற்சாகம் கொடுக்கும்.

பெரிய கொல்லைப்புறமோ அல்லது சிறிய மொட்டைமாடியோ இருக்கும் இடத்திற்கு தகுந்தாற்போல் நம்மளவிற்கு தோட்டம் அமைப்போம். மனதிற்கு உற்சாகம் அளிக்கும் தோட்டக்கலையினை வளர்த்து ஆரோக்கிய வாழ்விற்கு விதை விதைப்போம்.

பக்லாவா

பக்லாவா மிகவும் சுலபமாக செய்யகூடிய ஒரு பிரபலமான துருக்கிய இனிப்பு வகை ஆகும்.

தயாரிக்க நேரம்: 25-30 நிமிடங்கள்

தேவையான பொருட்கள்:

ஃபிலோ பேஸ்ட்ரி தாள்கள்: (ஃப்ரீசர் பிரிவில் கிடைக்கும்): 1-2 பெட்டிகள்

பேக்கிங் தட்டு: 1

Brush-1

சோள மாவு

சர்க்கரை: 2 கப்

தண்ணீர் -1.5 கப்

எலுமிச்சை சாறு -2 தேக்கரண்டி

நெய் -2 பவுண்டு

நட்ஸ்:பாதம், முந்திரி, பிஸ்தா, வால்நட்ஸ் (தேவைக்கேற்ப)

ஏலக்காய் தூள்: 3 தேக்கரண்டி

ஆரஞ்சு பூ தண்ணீர் (விரும்பினால்)

ரோஸ் வாட்டர் (விரும்பினால்)

செய்முறை:

1. முதலில் நெய்யை திரவமாக உருக்கவும். வடிகட்டி வைக்கவும்.
2. தண்ணீரை சூடாக்கி சர்க்கரையை சேர்த்து சர்க்கரை பாகு தயாரிக்கவும். அது குளிர்ந்த பிறகு எலுமிச்சை சாறு சேர்க்கவும்.
3. பருப்பு வகைகளை லேசாக வறுத்து, மிக்ஸியில் ஏலக்காய் பொடியுடன் சேர்த்து கொரகொரப்பாக அடிக்கவும்.
4. வெப்பச்சலன அடுப்பை 350 டிகிரிக்கு சூடாக்கவும்.
5. பேக்கிங் ட்ரேயை எடுத்து முதலில் நெய்யை முழுவதுமாக தடவவும்.

ஃபிலோ தாள்களை பெட்டியிலிருந்து பிரிக்கவும்.

7. தட்டில் கீழ் அடுக்குக்கு 3 தாள்களைச் சேர்த்து நெய் தடவவும்.பருப்பு பொடியைச் சேர்க்கவும். ஃபிலோ தாள்களை மேலே வைத்து சோள மாவைத் தூவி நெய் தடவவும். மற்றொரு தாள் வைத்து சர்க்கரை சிரப்பைத் தெளிக்கவும்.
8. ஃபிலோ தாள்-சோள மாவு, நெய்-பருப்பு பொடி-ஃபிலோ தாள்-சர்க்கரை சிரப்பை மீண்டும் மீண்டும் 3-4 தாள்கள் மீதமுள்ள வரை செய்யவும்.
9. மேல் அடுக்குக்கு 3-4 அடுக்குகளை உருவாக்க மீண்டும் ஃபிலோ தாள்-சோள மாவு-நெய் படிகளை repeat செய்யவும்.

மேல் அடுக்கை அலங்கரிக்க மீதமுள்ள பருப்பு பொடி, சர்க்கரை சிரப் மற்றும் நெய் கலவையை பரப்பவும். விருப்பமான வடிவங்களில் வெட்டவும்

10. மேல் அடுக்கு தங்க நிறமாக மாறும் வரை சுடவும்.

ஆறிய பிறகு பரிமாறவும்.

நித்யா சுதாகர்

இஞ்சி புளி குழம்பு

(Ginger Kuzhambu/Inji Puli)

சுவை: காரம், புளிப்பு, இனிப்பு கலந்த நெஞ்சை வருடும் குழம்பு. சாப்பிட ஏற்றது: சாதத்துடன், நெய் மற்றும் அப்பளம் / கூட்டு சேர்த்து.

தேவையான பொருட்கள்

பொருள்

பார்த்து எடுக்கவும் - இஞ்சியை நகத்தால் புது இஞ்சி (புதியதா, நல்ல தரமா என்று சுரண்டி பார்த்தால் உள்ளே மஞ்சள் நிறம், நறுமணம் இருந்தால் நல்லது) 4 கப்

தக்காளி (நன்றாகப் பழுத்தது - முற்றிப் பழுக்காததும், அதிகம் பழுத்து மெலிந்து போனதும் வேண்டாம்)2

புளி எலுமிச்சை அளவு, நிலக்கடலை எண்ணெய் 3 மேசைக்கரண்டி, கடுகு ½ டீஸ்பூன், வெந்தயம் 4 டீஸ்பூன், கருவேப்பிலை சிறிதளவு, மஞ்சள் தூள் 4 டீஸ்பூன், சாம்பார் பொடி 16 மேசைக் கரண்டி 1 டீஸ்பூன் (விருப்பப்படி, ஆனால் (காரத்திற்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாம்)

வெல்லம் சுவைக்க பரிந்துரைக்கப் படுகிறது) உப்பு தேவைக்கு, தண்ணீர் தேவைக்கு, பெருங்காயம் (விருப்பப்படி) 4 டீஸ்பூன்.

செய்முறை

1. புளி ஊறவைத்தல் புளியை ஒரு கப் வெந்நீரில் 10-15 நிமிடங்கள் ஊறவைக்கவும். பின், கெட்டியான புளி சாறு பிழிந்து வைக்கவும்.

2. இஞ்சி தயாரித்தல் எலுமிச்சை அளவு 3

2. இஞ்சி தயாரித்தல் புது இஞ்சியை நன்றாகக் கழுவி, தோல் சீவிக்கொள்ளவும். (இஞ்சியை வாங்கும்போது நகத்தால் சுரண்டி பார்த்து, உள்ளே மஞ்சள் நிறமும் நறுமணமும் இருந்தால், அது புதியது மற்றும் நல்ல தரம் கொண்டது என்பதை குறிக்கும்.) சிறிய துண்டுகளாக நறுக்கி, விழுதாக அரைத்துக்கொள்ளவும்.

3. தக்காளி தேர்வு & தயாரித்தல்: தக்காளி நன்றாகப் பழுத்திருக்க வேண்டும்; முற்றிப் பழுக்காததும், மிக அதிகம் பழுத்து மெலிந்து போனதும் தவிர்க்கவும். கழுவி, துண்டுகளாக நறுக்கி அல்லது அரைத்த சாறு தயார் செய்யவும்.

4. தாளித்தல்: ஒரு கடாயில் நிலக்கடலை எண்ணெய் சூடாக்கவும். கடுகு போட்டு சடசடக்கும் வரை வறுக்கவும். வெந்தயம், கருவேப்பிலை, பெருங்காயம் சேர்த்து கிளறவும்.

5. இஞ்சி வதக்குதல்: அரைத்த இஞ்சியை சேர்த்து, மிதமான தீயில் 2-3 நிமிடங்கள் மணம் வரும் வரை வதக்கவும்.

6. தக்காளி & மசாலா சேர்த்தல்: மஞ்சள் தூள், சாம்பார் பொடி, தக்காளி அரைத்த சாறு, உப்பு சேர்த்து 30 வினாடிகள் வதக்கவும்.

7. புளி சாறு சேர்த்தல்: புளி சாறு ஊற்றி, 10-15 நிமிடங்கள் கொதிக்க விடவும்.

புளியின் பச்சை வாசனை நீங்கி, குழம்பு சற்று கெட்டியாகும் வரை வேகவைக்கவும்.

8. இறுதி கட்டம்: வெல்லம் சேர்த்து நன்றாகக் கலந்து, மேலும் 2 நிமிடங்கள் மிதமான தீயில் வைக்கவும்.

பரிமாறும் விதம்: சூடான சாதத்தில் நெய் ஊற்றி, அப்பளம் அல்லது கூட்டு சேர்த்து பரிமாறினால் சுவை இரட்டிப்பு ஆகும்.

லாவண்யா சுப்பிரமணியம்



அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்...

Dr.அருணா சங்கர வேலாயுதம்

உலகத் தமிழினம் எல்லாம் ஒருங்கே குடி,
உவந்து நாடிக் கற்பது – எளிமையும்,
இனிமையும் , இசையும் அமைந்த
கம்பராமாயணம்.

“காலமெனும் ஆழியிலும்,
காற்று மழை ஊழியிலும்,
சாகாது கம்பனவன் பாட்டு – அது
தலைமுறைக்கு எழுதி வைத்த சீட்டு”

என்று கவிஞர் கண்ணதாசன் ‘காலத்தால் அழியாத காப்பியம்’ என்று கம்பராமாயணத்தைப் போற்றுகிறார். அந்த கம்பன் காட்டும் கவிநயம்மிக்க காட்சியைக் காண்போம். எத்தனை முறை படித்தாலும் திகட்டாத தெள்ளமுது கம்பனின் கவிநயம்மிக்க இந்தக் காட்சி.

இராமனும் சீதையும் சந்தித்துக் கொள்கின்ற முதல் காட்சி. பொன்னின் பிரகாசம், பூவின் நறுமணம் , தேனின் ருசி ,நல்ல கவிதை தரும் இன்பம்...என இவை எல்லாவற்றையும் போல் அழகு சீதை கன்னிமாடத்தில் நிற்கின்றாள்.

“மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ,
ஐயோ இவன் வடிவு என்பது ஓர்
அழியா அழகு உடையான்”

என்று கம்பர் வியந்து போற்றும் இராமனும் அங்கு வருகிறான் , சீதையைப் பார்க்கிறான். அவளும் அவனைப் பார்க்கிறாள். புகழ்பெற்ற ‘அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்” பாடல் இப்படித் தொடங்குகிறது.

“எண் அரு நலத்தினாள் இனையள் நின்றுழி.
கண்ணொடு கண் இணை கவ்வி. ஒன்றை ஒன்று
உண்ணவும். நிலை பெறாது உணர்வும் ஒன்றிட.
அண்ணலும் நோக்கினான்: அவளும் நோக்கினாள்”

நினைக்கவும் அரிதான அழகைக் கொண்ட சீதையும், இராமனும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். இருவர் கண்களும் ஒன்றை ஒன்று உண்டன.

அவர் தம் இதயங்கள் இடம் மாறின. உணர்வுகள் ஒன்று கலந்தன என்கிறார் கம்பர். இலக்கிய இன்பமும் கவிநயமும் கொண்ட இந்தப் பாடலில் உன்னதமான ஒரு உட்பொருளும் உண்டு. இராமனுக்கும் சீதைக்கும் இது முதல் பார்வை அன்று.

திருமால் அவதாரம் இராமன், திருமகளே சீதை.

இருவரும் ஒருவரை ஒருவர் பிரியாதவர்கள். அவர்கள் இருவரும் இராமவதாரத்தில் சந்திக்கும்போது “பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?” என்பது போல் ஒன்று கலந்தனர். இது இனிய இலக்கிய நிகழ்வு, தெய்வீக இணைப்பு, இறை சங்கமம். இதனைப் படித்தாலும், கேட்டாலும் லட்சுமி கடாஷத்துடன், இல்லறம் நல்லறம் ஆகும். வாழ்வு வளம் பெறும்- சகல சௌபாக்கியங்களும் கிட்டும் !

நம்பிக்கையின் சவாரி:

உணர்ச்சிமிக்க Texas MS 150 மிதிவண்டி பயணம்

ரவிசங்கர் பெரியசாமி

என் பெயர் ரவிசங்கர் பெரியசாமி, நான் ஹூஸ்டனில் வசித்து வருகிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளாக, நான் Texas MS 150 மிதிவண்டி பயணத்தில் தொடர்ந்து பங்கேற்று வருகிறேன். இது எனக்கு ஒரு உணர்வுபூர்வமான அனுபவமாக மாறி உள்ளது.

Texas MS 150 என்பது மல்டிபிள் ஸ்க்லெரோசிஸ் (MS) நோய்க்கு நிதி திரட்டும் நோக்கத்தில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் நடைபெறும் இரண்டு நாள் மிதிவண்டி பயணமாகும். இந்த நிகழ்வு, MS நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் நிதி திரட்டுவதற்கும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் நடத்தப்படுகிறது.

முதல் முறையாக இப்பயணத்தில் இணையும்போது, இது வெறும் சைக்கிள் ஓட்டம் என்று தான் எண்ணினேன். ஆனால், இந்த பயணம் ஒரு நோக்கத்துடன் கூடிய, ஒவ்வொரு ஆண்டும் நான் எதிர்நோக்கும் ஒரு தொண்டு முயற்சியாக மாறியுள்ளது.

Houston முதல் College Station வரை சுமார் 150 மைல்கள் மிதிவண்டியில் ஓட்டுவது என்பது, உடல் சக்தி மட்டுமல்ல, மன உறுதி, சமூக அக்கறை ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்திருக்கிறது.

பாதையில் உள்ள மக்கள், சிறுவர்கள், குடும்பங்கள் அனைவரும் கூவி சத்தமிட்டு, எங்களை ஊக்கப்படுத்துகிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் உள்ள தன்னார்வலர்கள், உணவு, தண்ணீர் மற்றும் புன்னகையுடன் வரவேற்கிறார்கள்.

பயணத்தில் சந்தித்த சில பயணிகளில் சிலர் தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்காக ஓடுகிறார்கள். சிலர் MS நோயுடன் இருந்தும் தாங்களே பங்கேற்கிறார்கள். அவர்களின் மன உறுதி தான் என்னை ஆண்டுதோறும் மீண்டும் இந்த சவாரிக்கு இட்டுச் செல்கிறது.

College Station னில் முடிவுக்கான கட்டத்தை கடந்த தருணம் மிகவும் பெருமை அளிக்கக் கூடிய ஒன்று. இது ஒரு உடல் சவால் மட்டும் அல்ல, இது ஒரு மனப்பூர்வமான சாதனை. Texas MS 150 என் வாழ்க்கையின் ஒரு முக்கியமான பகுதியாக மாறியுள்ளது. எத்தனை ஆண்டுகள் முடியுமோ, அத்தனை ஆண்டுகள் இந்தப் பயணத்தில் பங்கேற்க விரும்புகிறேன்.

“150 மைல்கள். 2 நாட்கள். 1 இலக்கு MS நோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும்.

நம்பிக்கைக்காக பயணம் செய்கிறேன், ஐந்து வருடமாக!”

அந்நியன்

(சிறுகதை)

ஆர் .எஸ் .மணி

“ டங்...”

“ சரக்.. சரக்..”

“ சாமி..”

வாசல் இரும்புக் கதவு திறக்கப்பட்டு, கனத்த செருப்புக் காலடியோசையுடன் காளிமுத்து

வந்துவிட்டாரென்றால் அன்று சனிக்கிழமை என்று சொல்லிவிடலாம் உறுதியாக..!

தலையில் முண்டாசு, காக்கி டிராயர், பட்டன்கள் சில இல்லாமலும் சில மாட்டப்படாமலும் சற்றே அழுக்கான சட்டையுடன் உடம்பில் மிடுக்கும் முகம்நிறைய சிரிப்புமாய் வீட்டின் ஓரப்பாதை வழியாய் பின்பக்கம் வந்து, தோட்டத்தை சில வினாடிகள் நோட்டம்விட்டபின் படிகளில் இறங்கி தென்னை மரங்களையும் , செடிகளையும் சொந்த பந்தங்களைப் பார்ப்பது போல ஒரு சுற்று பார்த்துவிட்டு மறுபடியும் பின்வாசல் படிகளிலேறி வருவதற்குள் அவரைப் பார்க்க நான் போய்விட வேண்டும் . இல்லையேல் கோர்ட்டில் கூப்பிடுவது போல மூன்றுமுறை’சாமி’ என்ற அழைப்புச் சத்தம் அலறும்.

தூக்கக் கலக்கத்தில், வாசலில் கிடந்த அன்றைய ஆங்கில தினசரியை எடுத்துக் கொண்டும் , மனைவி தந்த காபி டம்ளரை இன்னொரு கையில் பிடித்துக்கொண்டும் அவர் கூறுவதைக் கேட்டுவிட்டு,

“ காபி சாப்பிடுதீரா காளிமுத்து..” என்றேன் .

பதிலே இருக்காது. காதில் விழாதது போல

அன்றைய வேலைகள் பற்றிய ஒரே நினைப்போடு மடமடவென்று தோட்டத்திற்குள் சென்று விடுவார்

***

காளிமுத்துவின் பரிச்சயம் எப்படிக் கிட்டியது என்பதை சிரமப்பட்டு யோசித்தால்தான் நினைவுக்கு வரும் ; ஒருவிதத்தில் சுவாரசியமானதுதான்.

“ தென்னை மரம் பழுதுபாக்க வந்திருக்கேன் நம்ம தோட்டத்தில எத்தனை மரம்இருக்கு சாமி?” என்ற விசாரிப்புகளுடன்தான் அறிமுகமானார்.

“ என்ன பெரியவர் ரங்கனாதன் அனுப்பி வச்சாரா.. பரவாயில்லையே போனவாரம்தான் அவர்காதில் போட்டு வச்சிருந்தேன்..” என்ற என் கேள்விக்கு காவிப்பற்கள் தெரிய சிரித்து சிரிப்பையே பதிலாகத் தந்துவிட்டு, தனது பழைய சைக்கிளை காம்பவுண்டுக்குள் பத்திரமாக நிறுத்திவிட்டு தோட்டத்தை நோக்கி விரைந்தார் .

ஒரு சில மாதங்கள் கழித்துத்தான் ரங்கநாதனை சந்திக்க முடிந்தது. அப்போது காளிமுத்து சம்பந்தமாகப் பேச்சு வந்தது. தோட்ட வேலைகளில் அவர் காட்டும்

அக்கறை சிரத்தை ஈடுபாடு பற்றியெல்லாம் பாராட்டிவிட்டு அவரை அனுப்பியதற்காக நன்றியைத் தெரிவிக்கையில் ரங்கனாதன் சொன்னது ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

" காளிமுத்துன்னு யாரையும் நான் அனுப்பலியே.. எங்க ஏரியாவில தோட்டவேலை பாக்கிற ஆளு இன்னும் என் கண்ணுல படல.. எப்படியோ உங்களுக்கு நல்ல ஆளு கிடைச்சதில எனக்கும் மகிழ்ச்சிதான் .."

என்று அவர் சொல்ல சொல்ல காளிமுத்துவின் சாமர்த்தியத்தை மனசுக்குள் மெச்சிக் கொண்டேன். இன்றுவரை இது பற்றி அவரிடம் விசாரிக்கவும் மனம் வரவில்லை.

***

காளிமுத்து தோட்டத்தில் நிற்கிறார் வேலைபார்க்கப் போறார் என்றால் அன்றைக்கு தினசரி படிக்கவோ காலை செய்திகளை தொலைக்காட்சியில் பார்க்கவோ முடியாமல் போய்விடும் .

என் தலையைப் பார்த்ததும் செய்த வேலை செய்யப் போகும் வேலை பற்றி விவரிக்கத் துவங்கிவிடுவார் .

படித் திண்ணையில் என் மனைவி அவருக்காக வைத்துவிட்டுப் போன காபியை அவருக்கு எடுத்து சென்றாலோ அதில் அக்கறை காட்டாது பேச்சைத் தொடர்வார் .

ஒருநாள் கூட குடிக்க காபி வேண்டும் சாப்பாடு வேண்டும் என்று நச்சரித்ததேயில்லை. காபி குடிக்க வீட்டுக்குள் நுழைந்ததும் " என்னங்க.. அவர் வேலை செய்யறப்ப நீங்க பேச்சுக் குடுத்தீங்கன்னா அவர் எப்படி வேலை பாப்பார்? அவர் வேலையும் போச்சு.. நம்ம வேலையும் போச்சு.." என்று என் மனைவி அலுத்துக் கொள்வாள் .

ஆனால் தனது வேலைகளைக் காட்டி பாராட்டு வாங்கணும், அங்கீகாரம் பெறணும், வாங்கிற கூலி நியாயமானதுதான் என நம்மை உணர வைக்கணும் என்றே அவர் அப்படி நடந்து கொள்கிறாரோ என்றுதான் எனக்குப் படும்.

அவர் வேலை செய்யும் இன்னுமிரண்டு வீடுகளிலுள்ள தென்னை மரம், செடிகளின் பராமரிப்பு பற்றியும் அங்கே பூத்துள்ள விதவிதமான பூக்கள் பற்றியும் சுவாரசியாக விவரிக்கையில் குழந்தையாகிவிடுவார்.

நம்ம வீட்டுத் தோட்டத்தின் சிறப்பையும் அந்த வீடுகளில் உள்ளோரிடம் இதே போன்று விவரிப்பாரோ என்னவோ தெரியவில்லை.

நாம் கேட்காமலே அவசர அவசரமாக மரத்திலேறி இளநீர்க் காய்களைப் பறித்துப் போட்டு வெட்டி இளநீரைக் குடிக்கக் கொடுப்பார். அந்த நேரத்தில் மழையின்றி மரங்களில் விளைச்சல் குறைந்து போனதை மன உளைச்சலோடும், " மேல்மழை பெஞ்சா சரியாப் போகும் " என்ற நம்பிக்கையோடும் அரிவாளை சிமெண்ட் திண்ணைப் படியில் தீட்டிக்கொண்டே விவரிப்பார் காளிமுத்து.

" இளநீரை நீங்க கொஞ்சம் குடியுங்களேன் .."

என்று சொன்னதும் புன்முறுவலோடு தனது டிராயர் பையிலிருந்து ' அங்கு விலாஸ்' புகையிலை மட்டையைப் பிரித்து அதிலிருந்து ஒரு சிறு விள்ளலை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு மீண்டும் மரத்தில் விறுவிறுவென்று ஏறித் தொற்றிக்கொள்வார், கண்மூடித் திறப்பதற்குள்.

***

விடுமுறை நாட்களில் சாவகாசமாக அவருடன் இருக்கும் நேரங்கள் வாய்க்கும். அப்போது தனது குடும்ப சோகத்தை வெளிப்படுத்துவார்.

மூன்றாவது மகள் வேணி பேறுகாலத்துக்கு வந்தது, மருமகன் பொறுப்பில்லாமல் இருப்பது, தனக்கிருக்கும் கடன்கள், புதிதுபுதிதாக ஏற்படும் தேவைகள் எல்லாவற்றையும் சொல்லி பாரத்தை இறக்கி வைப்பார் மரத்திலிருந்து தேங்காய்க் குலையை இறக்குவது போல.

இப்படித்தான் ஒரு மாதம் பூராவும் வராமல் எதிர்பாராத ஒருநாள் காலையில் வந்த காளிமுத்துவிடம் விசாரிக்கையில் , லாரிடிரைவரான தன் மூத்தமகன் ஆந்திராவுக்கு லாரி ஓட்டிச் செல்கையில் விபத்தில் சிக்கி இறந்து அனாதைபோல அடக்கமானதையும் பின்னர் போலீஸ் மூலம் தகவலறிந்து போய் மகன் மூஞ்சியைக்கூட பார்க்க முடியாமல் திரும்பியதையும் விவரித்துவிட்டு " இன்சூரன்ஸ் மூலம் ஏதாவது கிடைக்குமா சாமி?" என்று ஏக்கம் நிறைந்த பார்வை யுடன் வினவியதும் ஆடித்தான் போய்விட்டேன். பேச நா எழவில்லை.

அதிர்ச்சியிலிருந்து மீண்டு இன்னாரைப் பாருங்க இப்படி செய்யுங்க என்று சொல்லி முடிப்பதற்குள் எதுவும் நடக்காதமாதிரி தோட்ட வேலையில் மூழ்கிவிட்டார்,சோகத்தில் என்னை மூழ்கடித்துவிட்டு.

***

காலை நேரத்தில் அந்த நவீன் சலூன் வாசலில் மட்டுமே காளிமுத்துவைப் பார்க்கலாம் . அவர் வீடு எந்த ஏரியாவில் என்றும் அறிந்ததில்லை. அவரைத் தொடர்பு கொள்ள அக்காலத்தில் கைபேசி வசதியும் இருவருக்குமில்லை.

சைக்கிளின் கேரியரில் தென்னை மரத்துக்கான ஆட்டுப் புழுக்கை உரம் நிறைந்த சாக்கு மூட்டைகளைக் கட்டிக்கொண்டும் பக்கவாட்டில் மண்வெட்டி அரிவாளை செருகிக்கொண்டும் அவர் கிளம்பி விட்டாரென்றால் வீடு திரும்ப சாயங்காலமாகிவிடும் .தோட்டத்தில் அவர் நுழைந்துவிட்டார் என்றால் அவரது மண்வெட்டிக்கும் அரிவாளுக்கும் தோட்டம் அடிமையாகிவிடும் .செடிகளும் பூக்களும் மழையைப்போல அவரது வருகையை வரவேற்பது போலிருக்கும் .

சிறு குப்பை கூட இல்லாமல் கண்ணாடி மாதிரி தோட்டத்தை ஒழுங்கமைக்கும் கலை அவருக்கு வசப்பட்டுருந்தது. மோட்டர் தண்ணீர்வரும் மெயின் குழாயுடன் பிளாஸ்டிக் பைப்புகளை ஒட்டுப் போட்டு இணைத்து ஒவ்வொரு மரத்துக்கும் நீரைப் பாய்ச்சுவார்; சாய்ந்த பூச் செடிகளை கம்பு நட்டி சிம்பு கட்டி நிறுத்தி வைப்பார் ; காய்ந்த சருகுகளைக் கூட்டி மூலையிலுள்ள குழியில் போட்டு எரித்துவிடுவார் . இதுபோன்ற வேலைகளை வேறு யாராவது செய்ய முடியுமா அதுவும் நாம் எதுவும் சொல்லத் தேவையில்லாமல் என்று வியந்து போவதுண்டு.

கயிறு, கம்பி, கட்டை எதுவும் விலைக்கு வாங்கவிட மாட்டார் . அவர் கைபட்டால் தென்னை ஓலை கயிறாகிவிடும் ; கம்பியாகவும் மாறிவிடும் . முருங்கை மரக்கிளை வெட்டப்பட்டு தாங்கிநிற்கும் ஊன்று கோலாக வடிவமெடுக்கும்.

வேலை முடிந்து மண்வெட்டையும் கைகால்களை யும் கழுவிவிட்டு தலை முண்டாசால் ஈரத்தைத் துடைத்துக்கொண்டே தோட்டத்தின் அழகை ரசிப்பார் . சிறு முறுவல் உதடுகளின் ஓரங்களில் இழையோடும்.

மறுநாள் வீட்டுக்கு வரும் நண்பர்களோ உறவினர்களோ தோட்டத்தின் பராமரிப்பு கண்டு ஆச்சரியப்பட்டு பாராட்டும்போது, அதை சீரமைத்த கலைஞன் காளிமுத்து களத்தில் இல்லையே என்று எண்ணுவதுண்டு.

***

மாசத்துக்கு இருமுறையாவது வந்து செல்லும் காளிமுத்து, வேலைக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகியும் வரவில்லை .எந்தத் தகவலும் இல்லை. செய்வது தெரியாது தத்தளித்தேன்.

நவீன் சலூனுக்கும் போய் விசாரித்தபோது," இப்ப கொஞ்ச நாளா அவர் வாறதேயில்லை. வந்தா வரச்சொல்றேன் சார் " என்ற பதில் மட்டுமே கடைக்காரர் கூறியதும் பதற்றம் மேலும் கூடியது.

தோட்டத்தின் கோலமே மாறியிருந்தது. தென்னைமரத்திலிருந்து முற்றிப்போன காய்கள் சிதறிக்கிடந்தன.பூந்தொட்டிகள் சாய்நதும் காய்ந்தும் கிடந்தன. செடிகள் ஒழுங்கின்றியும் கோரைப்புல் மண்டியும் காணப்பட்டது.

எங்கே பார்த்தாலும் குப்பையும் கூளமுமாக இருந்ததால் பூச்சி பாம்புக்கு அஞ்சி யாரும் தோட்டத்தை எட்டிக்கூட பார்ப்பதில்லை.

***

ஒரு சனிக்கிழமை அதிகாலைப் பொழுதில் வாசலில் இருமல் சத்தம் கேட்டு ஜன்னல் வழியாகப் பார்த்த போது, சிரம்பபட்டு சைக்கிளை நிறுத்திக்கொண்டிருக்கும் காளிமுத்துவின் உருவம் தெரிந்தது.

" என்னாச்சு காளிமுத்து? இத்தனை நாள் ஏன் வரலை? " என்று கேட்டுக்கொண்டே வாசலுக்கு ஓடினேன்.

பலநாள் சவரம் செய்யாத முகம், அழுக்கான

டிராயர், மெலிந்த தேகத்துடனான கோலத்தில் இதற்கு முன்பு அவரைப் பார்த்ததேயில்லை.

“ சாமி.. உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்னு நெனச்சேன் .. ஒருநாள் சைக்கிள்ல வீட்டில இருந்து வரப்ப பாவிப்பய அரைப்பாடி லாரிக்காரன் வேகமா வந்து அடிச்சுப் போட்டுட்டு போயிட்டான் . தெருவில நின்னவங்க ஆட்டோவில ஏத்தி .. கவர்மெண்டு ஆஸ்பத்திரியில சேத்து.. நாப்பது நாளு பெட்ல இருந்தேன் .. பொழச்சதே பெரிசு.. முதுகு எலும்புல ஏதோ பிரச்சினையாம் .. இனிமே மரம் ஏறக்கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டாரு.. சைக்கிளைக் கூட இன்னைக்குத் தான் வெளியே எடுத்தேன் . ஓட்டிப் பாப்பமேன்னு உங்க வீட்டுக்குத் தான் நேரே வந்தேன் .. ஏகப்பட்ட செலவு .. கடன் .. மன்னிச்சிருங்க ..”

தேம்பி அழுதுவிடுவார் போலப்பட்டது. பின்வாசல் சென்றவர் தோட்டத்தை வெறித்துப் பார்த்தார் .

என் மனைவியும் பிள்ளைகளும் எனது பின்னால் நின்றுகொண்டு மறுபிறவியெடுத்து வந்த காளிமுத்துவை கவலையோடு கவனித்தனர்.

கனத்த மவுனமே சில நிமிடங்களுக்கு நீடித்தது.

தோட்டத்தின் பரிதாபத் தோற்றத்தையும் காளிமுத்துவின் கோலத்தையும் மாறிமாறிப் பார்த்த எனக்கு நெஞ்சு கனத்தது; தொண்டைக்குழியில் ஏதோ அடைத்துக்கொண்ட மாதிரி இருந்தது. வார்த்தைகள் வெளியேறத் திணறின. மனைவி பக்கம் திரும்பி,” ஏம்மா.. காளிமுத்துவுக்கு காபி கொடு..” எனக் கூறிவிட்டு, சட்டைப்பையிலிருந்த பணத்தை எண்ணாமல் அப்படியே கொடுத்துவிட்டு “ மருந்து வாங்கி சாப்பிட இதை வச்சுக்கிட்டு உடம்பை நல்லாப் பாத்துக் கொள்ளும் ..” என்று கூறிவிட்டு தோட்டத்துப் பக்கம் பார்வையை செலுத்தினேன் .

எனது மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டவர் போல ,” சாமி, இன்னிக்குத் தோட்டத்தை முடிஞ்ச அளவுக்கு சுத்தம் பண்ணிட்டுப் போறேன்.. ஆனா.. மரம்தான் ஏற முடியாது கடைசி வரைக்கும் .. வேறு ஆளைக் கூட்டியாறேன் காய் இறக்க..” என தென்னை மரங்களை அண்ணாந்து பார்த்துக்கொண்டு ஏக்கத்துடன் காளிமுத்து கூறியபோது அவரது விழியோரங்களில் கண்ணீர் முத்தாகத் திரண்டு முட்டி நின்றது.

என் கண்களிலும்தான்..!

Jokes



M: பெயிண்ட் ஏன் அழுகிறது ?

F: பெயிண்ட்டை அடிக்கிறோம்ல அதான்

***

மருத்துவர்: உன் பொண்டாட்டிக்கு எல்லா டெஸ்டும் எடுத்து பார்த்ததுல கொழுப்பு அதிகமாக இருக்கிறது தெரிஞ்சுருக்கு

கணவன்: ஏன் டாக்டர் இதுக்கா ஐயாயிரம் பீஸ் அதை எங்கிட்ட கேட்டிருந்தா சொல்லியிருப்பேனே!

***

ராமு: தற்காப்புக்காக என்னென்ன வித்தைகள் தெரிஞ்சு வச்சுருக்கீங்க?

சோமு: மாவு ஆட்டுறது, தோசை சுடுறது.. அடிக்க வந்தா ஓடுறது..

***

அவன்: எங்க அம்மா அப்பவே சொல்லுச்சு.. நான் தான் கேக்கல..

இவன்: என்ன சொன்னாங்க

அவன்: நான் தான் கேக்கலையே!

உணர்வுகள் பலவிதம் ஹைக்கூக்களில்

ஷீலா ரமணன்

நூறு மூட்டை சுமந்த வலி
பிஞ்சு மகனின்
முதுகில் பள்ளிப்பை

இலவச உணவுக்காக அவன்
கேட்டது வகுப்பறை
எதிர்காலத் திட்டம் எழுதுக
சீர் சுமந்து வந்தார் அப்பா
வலித்தது மனசு கண்ணீருடன்
மருமகளாய் போன மகள்

கேட்பதெல்லாம்
தீபாவளி பட்டாசாய்
சுவைப்பதெல்லாம் பொங்கலாய்
அவள் ஒரு பண்டிகை

தேன் வந்து பாய்ந்தன காதினிலே
ரசித்து மகிழ்கிறேன்
நன்றி செவித்திறன் கருவியே

தடைகள் அவளுக்குத்தான்
தாண்டிவந்தது அவள் அனுப்பிய
தென்றல் காற்று

பட்டுத் துணிக்குள் பாப்பா
பால் குடித்த வாயில்
தெரிகிறாள் அம்மா

சூட்டில் போட்ட சோளப்பொரியாய்
படபடத்தது மனசு
பெண் பார்க்கும் படலம்

வெடித்தது பலூன் மட்டுமல்ல
அவன் இதயமும் தான்
உள்ளிருந்து அவள் மூச்சுக்காற்று

கொட்டிக் கொடுத்த திருப்தி
அம்மாவுக்கு- யானைப்பசிக்கு
சோளப்பொரி மாமியாருக்கு

குறுக்கெழுத்து



Across

1. மாம்பழம்
4. நண்டு
10. தண்ணீர்
11. கல்
12. ஆணி
14. ஐந்து
15. பச்சை
18. ஓநாய்
20. இலை
21. உடம்பு
22. அம்மா
24. ஊசி

Down

2. மீன்
3. ஏணி
5. அப்பா
6. அணில்
7. மஞ்சள்
8. பட்டம்
9. பந்து
13. எறும்பு
16. ஆடு
17. ஒட்டகம்
19. ஈ
23. பத்து

கண்டுபிடி கண்டுபிடி

இ	க	ரா	வூ	ச	றி	ன்	ப
கு	உ	ர	ல்	ழ்	ஞ	ங்	சி
ஊ	ரு	ட்	டி	கு	ரு	வி	ல
ஒ	ட்	ட	க	ம்	எ	ஜ	ந்
தை	த்	று	சி	டி	று	ம்	தி
கே	யெ	தி	ம	ன்	லை	ட்	ட
து	பு	ம்	று	எ	ணா	க	ந
லி	டை	ந	ரி	ம்	லி	ஓ	த

கரடி ஓணான் நரி எறும்பு சிலந்தி

சிறுத்தை ஒட்டகம் பன்றி குருவி எலி



சித்திரச் சாரல்

அனன்யா ஐயர்

தன்விக்

மிருத்திகா

நியர்திரி ராஜசேகரன்

ஸ்வஸ்தி
ராமகிருஷ்ணன்



வருனேஷ் செல்வராஜ்
விஜி ஆனந்த்



திரை நேரத்திற்கு மாற்றாகச் செய்யக்கூடிய செயல்கள்

நவியா
செல்வராஜ்
விஜயஆனந்த்

உடற்பயிற்சி சார்ந்த செயல்கள்: கயிறு குதிப்பு, இசைக்கு நடனம் ஆடுவது, பந்து விளையாட்டு.

படைக்கலை சார்ந்த செயல்கள்: வாழ்த்து அட்டைகள் தயாரித்தல், வரைதல், காகிதம், களிமண் அல்லது மறுசுழற்சி பொருட்களால் கைவினை, சிறுகதைகள் உருவாக்கல்.

உணர்வு மற்றும் தளர்வூட்டும் செயல்கள்: இயற்கை ஒலிகள், அமைதியான இசை கேட்பது.

கற்றல் சார்ந்த செயல்கள்: புத்தகம் வாசித்தல், புதிர்கள் தீர்த்தல், சதுரங்கம் போன்ற பலகை விளையாட்டுகள், இயற்கையை ஆராய்தல் – செடிகள், பூச்சிகள் அடையாளம் காண்தல், வீட்டி லேயே செய்யக் கூடிய விஞ்ஞான சோதனைகள்.

வீட்டுப்பணிகள்: செடிகளுக்கு நீர் ஊற்றுவது, காய்கறி கழுவுதல் அல்லது மேசையை அமைத்தல், அலமாரி அல்லது பொம்மைப் பெட்டியை ஒழுங்குபடுத்துவது, துணிகளை மடித்தல்.

சமூக செயல்கள்: கதாபாத் திரம் போல் நடிப்பது, பல்லாங்குழி, கபடி, குடும்பத்துடன் கதைகள் கூறுவது, வீட்டில் புதையல் வேட்டை.

பாரதி கலை மன்றம் - 2025

‘எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது
வேயன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே’

- தாயுமானவர்

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்.
அமிழ்ந்து பேரிருள் ஆம் அறியாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டீரோ?

-பாரதி கலை மன்றம்,
ஹூஸ்டன் டெக்சாஸ்